# தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ்
# ජාතික කියවීමේ මාසය විශේෂ සමරු කළාපය
# National Reading Month Journal

## 2019




**பொது நூலகம் நகரசபை – வவுனியா**

මහජන පුස්තකාලය, නගර සභාව - වවුනියාව

**Public Library, Urban Council - Vavuniya**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ்

# ජාතික කියවීමේ මාසය-විශේෂ සමරු කලාපය

# National Reading Month Journal

2019

Vol - 7

22 OCT 2021

Public Library
Jaffna

**பொது நூலகம் நகரசபை - வவுனியா**

**මහජන පුස්තකාලය නගර සභාව - වවුනියාව**

**Public Library Urban Council - Vavuniya**

10710(Arch

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

மலரின் பெயர் : தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ்

சிறப்பிதழ் : 07

தொகுப்பாசிரியர் : பாமினி உருச்சந்திரன்

வெளியீடு : பொதுநூலகம், நகரசபை, வவுனியா.

ஆண்டு : 2019

பதிப்புரிமை : பொதுநூலகம், நகரசபை, வவுனியா.

அச்சுப் பதிப்பு : பாரதி பதிப்பகம் - வவுனியா.

ISSN : 2478-074X

## Book Details

*Name of the Title* : *National Reading Month Journal*

*Volume* : *07*

*Editor* : *Bamini Uruchandran*

*Publisher* : *Vavuniya Public Library, Vavuniya.*

*Year* : *2019*

*Copy right* : *Vavuniya Public Library, Vavuniya.*

*Printers* : *Barathy Printers - Vavuniya.*

*ISSN* : *2478-074X*





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நகரசபை கீதம்

வாழ்க வவுனியா நகரசபை - என்றும்
வளமுடன் பல்லாண்டு
வளர்க வவுனியா நகரின்நிலை - நன்றாய்
வளரிள மதி போன்று

(வாழ்க...)

மருத வளஞ்செறி வயல்நிலம் சூழ்ந்திட
மத்தியில் உறைநகரில்
கருத அருங்கலை நூலகம் சுத்தம்
காத்து வளர்த்திடுவாய்

(வாழ்க...)

சிறுவர் பூங்காவோடு சிறந்த நற்சந்தை
சீரிய பலதெருக்கள்
நறுமலர்க் காவொடு நல்லெழில் வளர்த்து
நலம்மிகச் சேர்த்திடுவாய்

(வாழ்க...)

மக்களின் சேவையில் மகிழ்ச்சியைக் கண்டிடும்
மாண்புமிகு தலைவர்
பக்கத் துணையினில் உறுப்பினர் உழைத்திடப்
பாரினில் உயர்ந்திடுவாய்

(வாழ்க...)

பிறப்பது முதலாய் இறப்பது வரையில்
பெரும்பணி உன்பணியே
சிறப்பொடு மண்ணில் சீரிய சேவை
செய்து நீ சிறந்திடுவாய்

(வாழ்க...)

ஆக்கியோன்
கவிஞர் அகளங்கன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இ.கௌதமன்**

தலைவர் - நகரசபை, வவுனியா




**சு.குமாரசாமி**

உப தலைவர் - நகரசபை, வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகரசபை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 01. | வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி | - | vii |
| 02. | வவுனியா மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி | - | viii |
| 03. | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி | - | ix |
| 04. | யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகரின் வாழ்த்துச் செய்தி | - | x |
| 05. | வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | - | xi |
| 06. | நகரசபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி | - | xii |
| 07. | நகரசபை உப தலைவரின் வாழ்த்துச் செய்தி | - | xiii |
| 08. | நகரசபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி | - | xiv |
| 09. | பிரதம நூலகரின் செய்தி | - | xv |
| 10. | வடமாகாண நூலகங்களும் இலத்திரனியல் தன்னியமாக்கல் முயற்சிகளும் | - | 01 |
| 11. | அதிகரித்துவரும் ஊடகப்பயன்பாடும் அருகிவரும் வாசிப்புப் பழக்கமும் | - | 07 |
| 12. | Reading Inclination in the Modern Era | - | 12 |
| 13. | பாடசாலை நூலகம் ஒரு பார்வை | - | 14 |
| 14. | சிந்தனைத்திறனை அதிகரிக்கும் வாசிப்பு | - | 19 |
| 15. | வாசிப்பு மனிதனை பூரணமாக்கும் | - | 22 |
| 16. | வாசிப்புப்பழக்கத்தின் முக்கியத்துவம் | - | 25 |
| 17. | **ප්‍රියමනාප පාසල් පුස්තකාලය හා අප** | - | 27 |
| 18. | A View on the Book i most Liked | - | 29 |
| 19. | நான் வாசித்து இரசித்த நாவல் | - | 31 |
| 20. | **කියවීම සතුටු සිතින්** | - | 33 |
| 21. | Perfect Reading Full Fills | - | 34 |
| 22. | நூல்களை வாசிப்பவன் அறிவின் எல்லையைத் தொட்டவன் | - | 36 |
| 23. | Reading creates knowledge | - | 38 |
| 24. | **කියවීමේ චින්තනය සතුටින් අරඹමු** | - | 39 |
| 25. | சிறுவர்களிடமிருந்து வாசிக்கும் சமூகம் | - | 40 |
| 26. | Reading Society Starts from Childhood | - | 42 |
| 27. | தினம் தினம் வாசித்து திறமைசாலியாவோம் | - | 44 |
| 28. | வாசிப்பும் வாழ்வும் | - | 45 |
| 29. | மகிழ்ச்சிகரமான வாசிப்பு | - | 47 |
| 30. | வாசிப்பே சமாதானத்தின் வழி | - | 48 |
| 31. | சிறந்த பரிசு | - | 50 |
| 32. | தேசிய வாசிப்புமாத போட்டி முடிவுகள் | - | 52 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செயலாளர்

நகரசபை, வவுனியா



## நகரசபை உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வவுனியா நகர சபை நூலகத்தினால் ஏழாவது தடவையாக வெளியீடு செய்யப்படுகின்ற சிறப்பிதழிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்ற வகையில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியில் கணிசமான பங்கினை நூலகங்கள் வகிக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் பொது நூலகங்களின் பணி சிறப்பான தேவைப்பாடுகளை உடையதாக அமைந்திருக்க வேண்டுமென எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு பொதுநூலகம் சிறப்பாக இயங்குகின்றது என்றால் அந்தப் பிரதேசம் வளர்ச்சியடைந்த பிரதேசமாக கணிக்கப்படும். நூலகங்கள் தனித்து நூல்களை வாங்கி விநியோகிக்கும் இடமாக இல்லாமல் அதிவேகமாக வளர்ந்துவரும் உலகிற்கு ஏற்ப நவீன தொழில்நுட்பங்களையும் உள்வாங்கி பல்வேறு தேவைகளையும் சமூகத்திற்காக ஆற்றும் நிறுவனமாக, சமூகத்தினையும் பிரதேச சபைகளையும் ஒன்றிணைக்கின்ற இடமாக திகழ வேண்டுமென விரும்புகின்றேன்.

அவ்வகையில் இச்சிறப்பிதழ் வாசகர்களினதும், ஆக்கக் கர்த்தாக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்து எல்லோர் மத்தியிலும் நீங்கா இடம் பெற்றுக்கொள்ள வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

**ம. பற்றிக் டிறஞ்சன்**
உள்ளூராட்சி ஆணையாளர்
வடமாகாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வவுனியா மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வவுனியா மாவட்டத்தின் நகரசபையின் பொதுநூலகத்தால் நடாத்தப்படவிருக்கும் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவினை அலங்கரிக்கும் "தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ்" நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நம் எண்ணங்களே நம் செயல்களைத் தீர்மானிக்கின்றன. அத்தகைய எண்ணங்களைத் தீர்மானிப்பது நாம் வாசிக்கும் புத்தகங்கள்தான். நல்ல புத்தகங்களை வாசிக்கும் போது நம் மனம் நம்மை அறியாமல் அதில் உள்ள நற்கருத்துக்களின் மீதும் ஈடுபாடு கொள்ளும்.

நல்ல நூல்களின் வாசிப்பு பழக்கம் ஒரு நல்ல மனிதனை உருவாக்கும். நல்ல மனிதன் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவான். சீர்மிகு சமுதாயத்தை உருவாக்க உற்ற துணையாக இருக்கும் இந்த வாசிப்புப் பழக்கத்தை எல்லோரிடமும் கொண்டு செல்லவேண்டிய தலையாய கடமை நம் அனைவரையும் சாரும்.

இத்தகைய பெருமை மிக்க வாசிப்பை மகிமைப்படுத்தவும் வாசிப்புப் பழக்கத்தை எல்லோரிடமும் ஏற்படுத்தும் நோக்கத்துடனும் வவுனியா நகரசபையின் பொதுநூலகர் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவினை ஒழுங்கு செய்திருப்பதானது எம் இளம் சமூகத்திற்கான முன்னுதாரண செயற்பாடாகும்.

இம்மலர் வெளியீடு ஆண்டுதோறும் சிறப்புற நடைபெற வேண்டுவதுடன், இந்த வருடம் நூல் வெளியீட்டிற்கு பங்களிப்புச் செய்த நூலகர் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட உதவி நல்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**"நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்"**

**ஐ.எம்.ஹனிபா,**
மாவட்டச் செயலாளர்
வவுனியா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

தங்கள் சபையின் பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி வெளியிடப்படும் ஏழாவது இதழிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைவதுடன், தங்கள் பணி நீண்டு தொடர வாழ்த்துகின்றேன்.

தொடர்ந்தேர்ச்சியான தொழில்நுட்ப வேகத்தால் கைகளில் ஏந்தி புத்தகம் வாசிக்கும் பழக்கம், பத்திரிகை படிக்கும் பழக்கம் போன்றன கைநழுவிப் போய்க்கொண்டிருக்கும் இன்றைய காலத்தில் தேவை உணர்ந்தாற் போல் ஏழாவது இதழின் பிறப்பு மகிழ்வோடு வரவேற்கப்பட வேண்டியதாகும்.

பிறப்புக்கள் தொடர்ந்து, வாகர் வட்டத்தினைப் பல்கிப் பெருகச் செய்வதற்கு இத்தகைய செயற்பாடுகள் வேண்டியதொன்றாகும். அத்தோடு வாசிப்பின் மகத்துவத்தை எதிர்கால சந்ததிக்கு உணர்த்திய பெருமை தங்களையும் சாரும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான நற்செயற்பாடுகள் மென்மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

**திரு.அசங்க காஞ்சன குமார,**
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்.
வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகரின் வாழ்த்துரை

வவுனியா பொதுநூலக தேசிய வாசிப்பு மாதத்தின் ஏழாவது சிறப்பு மலருக்கான வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வவுனியா பொது நூலகத்தின் ஆக்கமிகு செயற்பாடுகளில் ஒன்றான இந்த சிறப்பு மலர் தனது வரலாற்றுப் பாதையில் தொடர்ச்சி விடுபடாது ஏழு ஆண்டுகளைக் கடந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இன்றைய கல்விச் சூழலின் பேசுபொருள்களில் முதன்மையானது வாழ்நாள் கற்றல் என்ற கருத்துநிலை கடந்த பத்தாண்டுகளாக வாழ்நாள் கற்றலின் அவசியமானது இலங்கையின் கல்விச் சூழலில் முக்கிய இடம் வகிக்கிறது. ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக்கல்வியை உள்ளடக்கும் பாடசாலைகள், உயர்நிலைக்கல்வியை கொண்டுள்ள பல்கலைக்கழகங்கள், இலவசமாக வழங்கப்படும் வளர்ந்தோர் கல்வி, தனிநபர் ரீதியிலும், குழுரீதியாகவும் அல்லது சமூக அமைப்புகளின் வரையறைக்குள்ளும் பெறப்படும் முறை சாராத் தேடுகையும் பயிற்சியும் ஆகிய பலதரப்பட்ட முறைசார்ந்த மற்றும் முறைசாராத கல்வி வடிவங்களை வாழ்நாள் கற்றலானது உள்ளடக்குகிறது.

வாசிப்பு இன்றி வாழ்நாள் கற்றல் என்பது சாத்தியமற்றது. வாசிப்புக்கு கற்றல், கற்பித்தல், தகவல் பெறுதல், ஆய்வு செய்தல், மனமகிழ்வு, சிந்தனை விருத்தி என பல நோக்கங்கள் உண்டு. சமூக உறுப்பினர்களிடையே வயது வேறுபாடு இன்றி பல மட்டங்களிலும் வாசிப்பை விருத்தி செய்யவேண்டிய பாரிய பொறுப்பு பொது நூலகங்களுக்கு உண்டு. தனிநபர், சுற்றுப்புற சமூகங்கள் மற்றும் தேசத்தின் மேம்பாட்டுக்கு வாசிப்பையும் வாழ்நாள் முழுவதுமான கற்றலையும் பலமட்டங்களிலும் மேம்படுத்துவதற்கான உந்துசக்தியாக இருப்பவை பொது நூலகங்கள். வாழ்நாள் கற்றல்மிக்க சமூகத்தில் உள்ளூர் கற்றல் அமைப்பை உலகளாவிய தகவல் அறிவு வளங்களுடன் இணைக்கும் முறைகளாக பொது நூலகங்கள் கருதப்படுவதால் வாழ்நாள் கற்றல் சார்ந்து தொழிற்படும் எதிர்கால அமைப்புகளின் அபிவிருத்தியில் அடிப்படை முக்கியத்துவத்தை வகிப்பதற்கு பொது நூலகங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காத்திரமான நூற் சேர்க்கை, அடிப்படைச் சேவைப்பகுதிகள், துடிப்பும் தேடலும் மிக்க தரமான வாசக சமூகம், முன்பள்ளிகள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் போன்ற சமூக அமைப்புகளின் அங்கத்துவம் என ஒரு சராசரி பொது நூலகத்திற்குரிய பண்புகளை நிறையவே கொண்டுள்ள வவுனியா பொது நூலகம் அகவை அறுபதில் நிற்பது போல் தெரிகிறது. இதுவரை ஆற்றிய சேவைகளுக்கான அங்கீகாரமாக பல விருதுகளையும் பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரியது. ஆக்கபூர்வமான சமூக உறுப்பினர்களை இச்சமூகத்திற்கு வழங்கும் வகையில் வாழ்நாள் கற்றல் சார்ந்து இப் பொது நூலகத்தின் பொறுப்புகள் எவை என்பதை உய்த்துணர்ந்து அதற்கேற்ப திட்டங்களை வகுத்து அவற்றை செயற்படுத்தி ஏனைய பொது நூலகங்களுக்கு முன்னுதாரணமாக இது வழங்கவேண்டும். மலர் ஒன்றை வெளியிடுதலென்பது இலகுவான செயலல்ல. மலர் உருவாக்கத்திற்குத் தேவையான அடிப்படையை வழங்குபவை நூலகங்கள். நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தகவல்களைத் தேடிப் பெற்று ஒழுங்குபடுத்தி பகுப்பாய்வு செய்து அவற்றை படைப்பாக்கங்களாக வெளிக்கொணரும் படைப்பாளிகளின் பின்னணியில் இருப்பவை நூலகங்களே. இம்மலர் உருவாக்கத்தை நல்லமுறையில் கொண்டு வரப் பாடுபட்டு உழைத்த மலர்க்குழுவினர் போற்றப்பட வேண்டியவர்கள். எனது உளப்பூர்வமான பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் இவர்களுக்கு உரித்தாகட்டும். இம் மலரின் வெளியீடு ஒவ்வொரு வருடமும் தடையுறாது தொடரவும் அதற்கான ஆளுமை மிக்க படைப்பாளர்கள் கிடைக்கவும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்**
பிரதம நூலகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

**'மனிதனின் அடையாளம் வாசிப்பு'**

வாசிப்பு என்பது ஆறறிவு படைத்த மனிதனின் ஆறாவது அறிவின் வெளிப்பாட்டுக்கு உதாரணமாகக் கூறக்கூடிய ஒரு விடயமாக கொள்ளலாம். இது ஒரு கற்றலின் அடையாளமாக இருந்தபோதிலும் செயற்பாட்டுடன் தொடர்புபட்டதாக ஆற்றுகையுடன் தொடர்புபட்டதாக அமைவதால் தனித்துவமாக கவனிக்கத்தக்கது.

வாசிப்பு என்பது ஒரு விடயத்தை அதில்உள்ள எழுத்துக்குறிகளை இனங்கண்டு ஒலிக்குறிகளை விளக்கி எழுத்துக்களையும் ஒலிக்குறிகளையும் இணைத்து அதன் உள் பொதிந்துள்ள விடயத்தையும் விளக்கி மற்றவர்களுக்கு கேட்கும் வகையில் உரத்து வாசிப்பாற்றுகை செய்வதில் இருந்து மௌனவாசிப்பாகத்தான் விளங்கிக்கொள்வது வரை வேறுபட்டதாக வரையறை செய்ய முடிகின்றது. அதுமட்டுமல்லாது வாசித்து விளங்கிக்கொண்ட விடயம் எமது செயல்களில் தாக்கம் விளைவிக்கும் கட்டளையாகவோ, பணிப்பாகவோ, விளம்பரமாகவோ, விடயதானமாகவோ, சிந்தித்து இரசிக்கத்தக்கதாக மனவெழுச்சியை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகவோ அமையமுடியும். அவ்வாறு நோக்கினால் சிந்தனைக்கிளர்ச்சிக்கான ஒரு பாதையாக நுழைவாயிலாக வாசிப்பைக் கருதமுடிகின்றது. வாசிப்பின் மூலம் சிந்தனை விருத்தி ஏற்பட்டு கற்றலாகி மனிதனின் நடத்தையில் அது மாற்றத்தைக்கொண்டுவர முடிகின்றபோது அதனையே “வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான்” என்ற பொன்மொழி எடுத்தியம்புகின்றது.

அதுமாத்திரமல்லாது எழுதுவதன்மூலம் தனது வாழ்வு பற்றிய பார்வை அனுபவங்களை மனவெழுச்சிகளை கட்டுரையாகவும் அறிவுத்திரட்டுக்களாகவும், நாவல்கள், புனைகதைகள், கவிதைகள் போன்ற வெளிப்பாடுகளாகவும் தொகுக்கின்றபோது அவ்வாழ்வனுபவங்களை, இலக்கியங்களை வாசிப்பதன் மூலம் இன்றும் ஒருவன் அதே எண்ணச் சூழலுக்குள் தன்னை உட்படுத்திக்கொள்வதுடன் தனது அறிவை திரட்டுகின்றான். எனவே வாசிப்பு என்பது அறிவுசார் தேடலுக்கு மிக முக்கியமாக ஒரு விடயமாக கருதப்படக்கூடியது.

இன்றைய மாணவர்களின் வாசிப்புக்கான சந்தர்ப்பம் இலத்திரனியல் காட்சிக்கருவிகளால் பெருமளவில் முடக்கப்பட்டு வாசிப்பு என்பது வெறும் பார்வையாளர்களாக மாற்றும் தன்மையினை ஏற்படுத்தி உள்ளது. இதன் விளைவு வெறும் கேட்பவைகளையும் பார்ப்பவைகளையும் உருவாக்குவதுடன் படைப்பாற்றல் தன்மை குறைவடைவதற்கும் வழிவகுகின்றது. இது எதிர்காலத்தில்பாரிய விளைவை ஏற்படுத்தும். எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கத்தினை வைத்திப்பதற்கு உறுதுணையாக இருத்தல்வேண்டும். தாம் வாசிப்பதில் விருப்பம் காட்டினால் பிள்ளைகளும் அதில் நாட்டம் காட்டுவர். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நூலை அதன் ஒரு சில பக்கங்களையாவது வாசிக்கும் வகையில் நாளாந்த பழக்கமாக ஏற்படுத்த ஆசிரியர்களும் பெற்றோர்களும் தமது மாணவர்களை பிள்ளைகளை வழிப்படுத்தவேண்டும். ஏனெனில் வாசிப்பு என்பது மனித இனம் தவிர்ந்த வேறு எவருக்கும் கைவரப்பெறாத ஒரு பேறு எனலாம்.

**முத்து இராதாகிருஷ்ணன்**
வலயக்கல்விப்பணிப்பாளர்
வவுனியா தெற்கு கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகரசபை கௌரவ தலைவரின் வாழ்த்துச் செய்தி

வவுனியா நகரசபை பொதுநூலகத்தில் இடம்பெறும் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகளில் மலர் வெளியீடும் ஒன்றாகும். வருடாந்தம் வெளியிடப்படும் தேசிய வாசிப்புமாத சிறப்பிதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியில் கணிசமான பங்கினை நூலகங்கள் வகிக்கின்றன. இன்றைய காலக்கட்டத்தில் பொது நூலகங்களின் பணி சிறப்பான தேவைப்பாடுகளை உடையதாக அமைந்திருக்க வேண்டுமென எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு பொதுநூலகம் சிறப்பாக இயங்குகிறது என்றால் அதனை சார்ந்த பிரதேசம் வளர்ச்சியடைந்த பிரதேசமாக கணிக்கப்படும். நூலகங்கள் அதிவேகமாக வளர்ந்து வரும் உலகிற்கு ஏற்ப நவீன தொழிநுட்பங்களையும் உள்வாங்கி பல்வேறு தேவைகளையும் சமூகத்திற்காக ஆற்றும் நிறுவனமாக திகழவேண்டுமென விரும்புகிறேன்.

ஒரு மனிதனின் நல்ல நண்பன் புத்தகங்களேயாகும். வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும் என்பதற்கிணங்க வாசிப்புப்பழக்கமானது அறிவைப்பெருக்கி, சிந்தனையைத் தூண்டி உண்மையை வெளிக்கொணரும். எனவே நூல்களை தேடித்தேடி வாசித்துக் கற்றுக்கொள்ள அறிவு மேன்மேலும் விருத்தியடையும்.

**"தொட்டனைத் ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு**
**கற்றனைத்து ஊறும் அறிவு"**

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அறிவு பூர்வமானதும், ஆரோக்கிமானதுமான ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டுமெனின் மாணவச்செல்வங்களுக்கு சிறு வயதிலேயே வாசிப்பு பழக்கத்தை பின்பற்றும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

வடமாகாணத்தில் இரண்டாவது பெரிய நூலகமாகவும், 45,000 இற்கும் மேற்பட்ட பல்துறைசார் நூல்களையும் கொண்ட வவுனியா நகரசபை நூலகத்தை வவுனியா வாழ்மக்கள் மற்றும் மாணவச்செல்வங்கள் தமது அறிவுப்பசியைப் போக்க பயன்படுத்தி பயன்பெற வேண்டுமென கேட்டுக்கொள்வதோடு, இப்பணி எதிர்காலத்தில் மேன்மேலும் சிறப்புடன் வளர வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி நிற்கிறேன்.

**தேசபந்து இ.கௌதமன்,**
தலைவர்,
நகரசபை,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகரசபை கௌரவ உப தலைவரின் வாழ்த்துச் செய்தி

வவுனியா நகரசபையின் பொதுநூலகத்தில் ஆண்டுதோறும் வெளியிடப்படும் தேசிய வாசிப்புமாத சிறப்பிதழுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய தலைமுறையினரிடையே வாசிப்புப்பழக்கம் அருகி வருகின்ற நிலையினைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலையினைப்போக்கி வாசிப்பு பழக்கத்தினை ஊக்குவிப்பதற்கு நாமனைவரும் எமது குழந்தைகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

மேலும் தமிழ் மொழியின் தனித்துவமான பெருமைகளை அறியவும் பிரதேசத்தின் பண்பாட்டினை வலுப்படுத்தி அதன்வழி நின்று, சீரிய சிந்தனைத்திறன்களை மொழியூடாகப் பெற்றுக்கொள்ளவும், மறைந்து பரந்து இருக்கும் மொழியாற்றல்களை வெளிக்கொணரும் களமாக நூலகம் விளங்குகிறது.

எதிர்காலத்தில் இது வடமாகாணத்தின் ஒரு வரலாற்றுப் பொக்கிசமாக போற்றப்படவும், காலத்தால் அழியாது நின்று நிலைத்து வளரும் வருங்கால தலைமுறையினரின் வாழ்வுக்கு ஒளியூட்டவும் வாழ்த்துவதோடு இந்நூலகப்பணி சிறந்தோங்கி வளர இறைவனை வேண்டி இம் மலர் தொடர்ந்து பல புத்தாக்கங்களுடன் வெளிவர வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**தேசமான்ய சுந்தரம் குமாரசாமி**
உப நகரபிதா
நகரசபை,
வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகரசபை செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வவுனியா நகரசபையின் பொது நூல் நிலையத்தினால் வருடாந்தம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிடப்படும் தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழுக்கு ஆசிச்செய்தி வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, இறைவனுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்தவும், வாசிப்புப்பழக்கத்தை ஊக்குவிக்கவும் வருடாந்தம் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் செயற்பாடுகளாக வவுனியா நகரசபை பொதுநூலகத்தினால் பல்வேறுபட்ட போட்டிகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்படுவதுடன், தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழும் வெளியிடப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக வடமாகாணத்திலே இரண்டாவது பெரிய நூலகமாக விளங்கும் நகரசபை பொது நூலகம் அண்மையில் தரம் – 1 நூலகமாக தரம் உயர்த்தப்பட்டமை எம் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. தரம் – 1 நூலகமாக தரம் உயர்வதற்கு உழைத்த பிரதான நூலகர், நூலகர் மற்றும் அலுவலர் குழாமுக்கும் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதனின் கண்டுபிடிப்புகளிலே மிகச்சிறந்தது புத்தகங்களே என 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானியாக விளங்கிய அல்பேர்ட் ஐன்ஸ்டீன் குறிப்பிட்டுள்ளார். உலகில் பல்வேறு துறைசார் நிபுணர்கள் தமக்கென ஓர் தனியிடத்தை பிடிப்பதற்கும், அவற்றை தக்கவைத்துக்கொள்வதற்கும், அவர்கள் மக்கள் முன்னோடியாக திகழ்வதற்கும் வாசிப்பு பழக்கம் பெரிதும் உதவியுள்ளதுடன், அவர்களது புத்தக வாசிப்பு அவர்களது வாழ்க்கையில் ஏற்படுத்திய பல மாற்றங்களை வெளிப்படையாகவே தெரியப்படுத்தியும் உள்ளனர்.

அதீத தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் பரீட்சையில் சித்தியடைவதனை நோக்காக கொண்ட கல்வி மற்றும் கற்பித்தல் முறைகள் வாசிப்பு பழக்கத்தை மருகச்செய்கிறது என்ற கருத்தை யாரும் மறுக்கமுடியாது. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு பல துறைசார்ந்த விடயங்களை கற்கவேண்டியுள்ளது. அவற்றில் மிக முக்கியமானது புத்தகங்கள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் என்பவற்றில் வெளிவரும் பல்தரப்பட்ட விடயங்களை ஆழமாக வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதன் மூலமே ஆளுமை விருத்தி சாத்தியப்படுகிறது. ஒருவருக்கு வாசிப்பின் முக்கியம் பாடசாலை காலத்தில் எடுத்துக்காட்டப்படுவதுடன் அது ஒருவரின் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து இடம்பெறும் செயற்பாடாகவும் காணப்படவேண்டும் என்பதுடன், வாசிப்பு பழக்கத்தை ஒருவரின் பாடசாலைக்காலத்தில் வளர்த்தெடுக்கவேண்டிய முக்கிய பணியை ஆசிரியர்கள் குறைவின்றி ஆற்றுதல் வேண்டும்.

45000 க்கும் அதிகமான நூல்களை கொண்டு இயங்கும் எமது நகர சபை நூலகத்தை பெரியோர், சிறியோர் என்ற வேறுபாடு இன்றி அனைவரும் பயன்படுத்தி வாசிப்பதன் ஊடாக அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும் எனக்கேட்டுக்கொள்வதோடு, இந்த தேசிய வாசிப்பு மாத இதழ் சிறப்பாக இவ்வருடமும் மலர உழைத்த நூலகர்களுக்கும், அவர்களது குழாமுக்கும் எனது நன்றியைத்தெரிவிப்பதோடு, வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு.இ.தயாபரன்**
செயலாளர்
நகரசபை, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம நூலகரின் செய்தி
# வவுனியா பொதுநூலக வளர்ச்சியும் சேவையும்

வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகிற்கு ஏற்ப வவுனியா மாவட்டத்தின் மத்தியிலே அமைந்து அளவில்லா அறிவை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் வழங்கி அறிவுத் தேடலுக்கு ஆதரவு கொடுக்கும் நிலையமான வவுனியா பொது நூலகத்தின் 7வது தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ் வெளியிடுவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இந்நூலகமானது வவுனியா மக்களின் அறிவு வளர்ச்சியை நோக்கமாக கொண்டு 30.10.1959 விஜயதசமி நன் நாளில் பட்டினசபைத் தலைவர் வேலு சபாபதி சுப்பிரமணியம் அவர்களால் பட்டினசபைக் கட்டடத்தில் சுமார் 500 நூல்களுடன் ஆரம்பிக்கப்பட்டு நூலகப் பொறுப்பாளராக திரு.கதிரவேற்பிள்ளை பத்மநாதன் அவர்களின் கண்காணிப்பில் இயங்கத் தொடங்கியது.

தொடர்ந்து 1964ல் தெரிவு செய்யப்பட்ட பட்டினசபை கௌரவ தலைவர் திரு.மயில்வாகனம் பொன்னையா மற்றும் சபை உறுப்பினர்களின் முயற்சியால் பட்டினசபை நகரசபையாக மாற்றப்பட்டது. அக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக இராணுவத்தினரின் பாவனைக்கு நகரசபை உள்வாங்கப்பட்டதனால் நூலகம் உள்வட்ட வீதியிலுள்ள ஒரு வீட்டிலும் பின்பு வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாகவும் இயங்கியது.

பின் 1970,1971ஆண்டுகளில் கடமையாற்றிய விசேட ஆணையாளர்கள் உயர்திரு.யு.பி.திசநாயக்க, உயர்திரு.டான்ஸ்போத், உயர் திரு.பொன்கமலநாதன் போன்றோரின் ஊக்கத்தினால் நகரசபை வீதியில் சைவப்பிரகாச கல்லூரிக்கு அண்மையில் வட மாநில வேலை அத்தியட்சகர் ஜி.எஸ்.விக்ரமசிங்க அவர்களால் 15.09.1971ல் நூலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு 07.06.1972ல் W.E.V.S.T.அல்விஸ் உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு Care, Asia Foundation, Forut போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் அன்பளிப்புகள் மூலம் நூல்களின் எண்ணிக்கையிலும் வளர்ச்சிகண்டு தரம் 3 நூலகமாக பதிவாகியது.

மேலும் 1994ல் தெரிவு செய்யப்பட்ட நகரசபை கௌரவ தலைவர் ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் நூலக வளர்ச்சியில் ஆர்வம் மிக்க செயற்பாடு உள்ளூராட்சி ஆணையாளர் திரு.க. சபாபதிபிள்ளை, வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு.த.நாகேஸ்வரன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.கணேஷ், வவுனியா பிரதேச செயலாளர் திருமதி.இமல்டா சுகுமார் ஆகியோரின் ஆதரவுகளுடன் பூங்காவின் முன் 21.10.1994ல் நகரசபை தலைவர் ஜி.ரி.லிங்கநாதன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு சுமார் 21,255,000 ரூபா செலவில் கட்டப்பட்டு 3.4.1998ல் மக்களனைவராலும் போற்றப்படும் மகத்தான நூலகமாக கௌரவ ஜி.ரி.லிங்கநாதன் அவர்களாலேயே திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் 09.02.1998 முதல் தரம் 2 நூலகமாக தரமுயர்த்தப்பட்டு வடக்கு மாகாணத்திலேயே இரண்டாவது நூலகமாக சுமார் 17000 நூல்களை உள்ளடக்கி, இரவல் வழங்கும் பகுதி, சிறுவர் பகுதி, பத்திரிகைகள் பகுதி, உசாத்துணைப் பகுதி, ஆவணப்பகுதி (பத்திரிகைகள், வர்த்தமானிகள்), இலங்கை வெளியீடுகள் சேகரிப்புப் பகுதி, படிப்போர் கூடம் போன்ற பகுதிகளாக சேவைகள் நடைபெற்று வந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து சபை கௌரவ தலைவர் S.N.G.நாதன் அவர்களின் முயற்சியால் 2009இல் சிங்கப்பூரிலிருந்த வணக்கத்திற்குரிய தேரர் கலாநிதி.குணரட்ண அவர்களால் அன்பளிப்பாக கணினிகள் கிடைக்கப்பெற்று நூற்பதிவுகள் கணிணிமயப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

15.10.2012 வெள்ளைப் பிரம்புத்தினத்தில் அரிமாசங்கம், Orhan நிறுவனங்களின் ஆதரவுடன் பார்வையற்றோருக்கான பிறைலி பகுதி நகரசபை கௌரவ தலைவர் திரு.க.கனகையா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

2019இல் சுமார் 600,000 ரூபா சபை நிதி மூலம் இலத்திரனியல் நூலகப் பகுதி உருவாக்கப்பட்டு 01.10.2019ல் நகரசபை கௌரவ தலைவர் திரு.இ.கௌதமன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு சேவைகள் வளர்ந்து வருவதுடன் சிறுவர்களுக்கான கதைசொல்லும் நேரம் முதியோர் இல்லம்,சிறுவர் இல்லங்களுக்கான நடமாடும் சேவை, சனசமூக நிலையங்களுக்கான பத்திரிகைகள் வழங்கும் சேவை போன்ற பல விழிப்புணர்வு சேவைகளும் நடைபெற்று வருகின்றன.

மற்றும் நூலகத்திற்கு வருடாவருடம் நூல்கள், நூலக ஆவணங்கள் சுமார் 800,000ற்கு குறையாமல் கொள்வனவு செய்வதுடன் Asia foundation, Orhan, இந்து கலாசார அமைச்சு மற்றும் பொதுமக்களின் அன்பளிப்புகள் மூலமும் நூல்கள் கிடைக்கப்பெறுகின்றன. இவ் வருடம் விசேடமாக இந்திய துணைத்தூதரகத்தினாலும் நூல்கள் அன்பளிப்பாக கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு வாழையடி வாழையாக வளர்ந்து வரும் நூலகம் தற்போது 42000 நூல்களை கொண்டுள்ளதுடன் நூலகத்திற்கான மென்பொருளில் கணினி மயப்படுத்தி தன்னியமயமாக்கல் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்கமைப்புகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நூலகத்தால் வருடாவருடம் தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபரில் நகரசபை எல்லைக்குட்பட்ட 17 பாடசாலை மாணவர்களிடையே வகுப்பு ரீதியாகவும் வாசகர்களிடையே வயது மட்டத்திலும் 25 முன்பள்ளி சிறார்களுக்கிடையே போட்டிகளும் நடாத்தப்பட்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டு வாசிப்பு ஊக்கப்படுத்தப்பட்டு வருவதுடன் 2013ம் ஆண்டு முதல் பல ஆக்கங்கள் தாங்கிய தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழும் வெளியிடப்பட்டு வருகின்றது.

இத்தகைய அறிவு விருத்திக்கான வாசிப்பை ஊக்குவிக்கும் சேவைகளால் நூலகம் தேசிய வாசிப்பு மாதம் சிறப்பாக நடாத்துதல், பேணலும் பாதுகாப்பும் போன்ற நிகழ்வுகளிற்காக ஒவ்வொரு வருடமும் விருதுகளும் சான்றிதழ்களும் பெற்று வருவதும் 2013இல் சுவர்ணபுரவர ஜனாதிபதி விருது கிடைக்கப்பெற்றதும் குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு சேவைகளையாற்றி தனது அறுபதாவது ஆண்டில் கால்பதித்து நிற்கும் எமது வவுனியா பொது நூலகம் 26.02.2019 முதல் தரம் 1 ஆக உயர்வுபெற்றுள்ளது என்பதனை பெருமையுடனும் மகிழ்வுடனும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு வளர்ச்சி காண்பதற்கும் சேவையாற்றுவதற்கும் ஊக்கமளித்த கௌரவ சபைத்தலைவர்கள், கௌரவ உறுப்பினர்கள், உள்ளூராட்சி ஆணையாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், விசேட ஆணையாளர்கள், செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் இவ் வாசிப்பு மாத நிகழ்வை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய கௌரவ தலைவர், உபதலைவர், உறுப்பினர்களுக்கும் உறுதுணையாக இருக்கும் செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் சக உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனைக்குழு உறுப்பினர்களுக்கும் இவ்விதழுக்கு ஆசியுரைகள் ஆக்கங்கள் வழங்கிய பெரியோர்களுக்கும் வாசகர்களுக்கும் ஊக்கமுடன் செயற்பட்ட என் சக நூலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பயிற்சியாளர்கள், தொண்டர் சேவையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் நூலக சேவை மென்மேலும் வளர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றேன்.

**திருமதி.பாமினி உருச்சந்திரன்**
பிரதம நூலகர் - பொது நூலகம்
நகரசபை, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூலக ஆலோசனைக்குழு உறுப்பினர்கள்




நூலக நிர்வாகமும் உத்தியோகத்தர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண நூலகங்களும் இலத்திரனியல் தன்னியமாக்கல் முயச்சிகளும்

திரு.சி.கேதீஸ்வரன்
சிரேஸ்ட உதவி நூலகர்
யாழ்.பல்கலைக்கழகம்

முகாமைத்துவ அமைப்புக்களின் நடைமுறைகள் அதன் பயனாளர்களை திருப்திப்படுத்தவும் அதன் செயற்றிறனை மேம்படுத்தவும் பற்பல புதிய திட்டங்கள், தொழில்நுட்பங்கள், மற்றும் திறன்விருத்திகளை உள்வாங்கி அவ்வப்போது மாற்றமடைந்து வருகின்றன. இதே வகையில் நூலக முகாமைத்துவ மற்றும் சேவை அமைப்புக்களும் மாற்றமடைந்து வருகின்றன. இம்மாற்றங்களுடன் நூலகங்களை விருத்தி செய்வதற்கு பல்வேறு மென்பொருட்களும் சேவைகளும் தேவைப்படுகின்றது. இலங்கை வடமாகாண நூலகங்களில் பல்வேறு விதமான மென்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. திறந்த மென்பொருட்களாக Koha, dspace, Winisv என்பவனவும், வர்த்தக மென்பொருட்களாக Libsys 2ம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் புள்ளிவிபரங்களின் படி Koha எனும் மென்பொருளானது அதிகளவான நூலகங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாட்டிற்கு திறந்த மென்பொருட் பயன்பாடே சிறந்ததாக இருக்கும் என ஆய்வுகள் எடுத்துக்கூறுகின்றன.

இலங்கை வடமாகாணம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா எனும் ஐந்து இரண்டாம் நிறைவு நிர்வாகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அட்டவணை 1 இல் காணப்படும் விபரங்களுக்கு அமைய இலத்திரனியல் நூலக தன்னியமாக்கல் செயற்பாடு 2005ம் ஆண்டிலிருந்தே தொடங்கப்பட்டுள்ளது. ஆனால் இது ஒரு பல்கலைக்கழக நூலகத்திலேயே பயன்படுத்தப்பட்டுவருகின்றது. ஆனால் பொது நூலகங்களைப் பொறுத்தவரையில் 2013ஆம் ஆண்டே இலத்திரனியல் நூலக தன்னியமாக்கல் செயற்பாடானது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

அட்டவணை 1 : இலங்கை வடமாகாணத்தில் பயன்படுத்தும் மென்பொருட்கள்.

| இல | மாவட்ட நூலகம் | வகை | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் | கல்வி | 2005 |
| 02 | யாழ்ப்பாணப் பொது நூலகம் | பொது | 2016 |
| 03 | மானிப்பாய் பொது நூலக வலையமைப்பு | பொது | 2018 |
| 04 | சுன்னாகம் பொது நூலக வலையமைப்பு | பொது | 2019 |
| 05 | யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி | கல்வி | 2016 |
| 06 | உயர்தர தொழில்நுட்ப நிறுவனம் | கல்வி | 2014 |
| 07 | சென்.ஜோன்ஸ் கல்லூரி | கல்வி | 2013 |
| 08 | இலங்கை கலைக்காப்பகம் | காப்பகம் | 2014 |



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| இல | மாவட்ட நூலகம் | வகை | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 09 | கொக்குவில் பொது நூலகம் | பொது | 2017 |
| 10 | கல்வியியற் கல்லூரி - யாழ்ப்பாணம் | கல்வி | 2012 |
| 11 | ஹாட்லி கல்லூரி | கல்வி | 2015 |
| 12 | மெதடிஸ்த கல்லூரி | கல்வி | 2016 |
| 13 | கிறிஸ்தவ இறையியல் கல்லூரி | கல்வி | 2016 |
| 14 | யால்டன் கல்லூரி - கிளிநொச்சி மாவட்டம் | கல்வி | 2015 |
| 15 | கிளிநொச்சி பொது நூலகம் | பொது | 2017 |
| 16 | மாந்தைகிழக்கு பொதுநூலகம்-மன்னார் மாவட்டம் | பொது | 2017 |
| 17 | மன்னார் பொது நூலகம்-வனியா மாவட்டம் | பொது | 2017 |
| 18 | வவுனியா பொது நூலகம் | பொது | 2013 |
| 19 | யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம் | கல்வி | 2014 |
| 20 | நெடுங்கேணி பொது நூலகம் | பொது | 2017 |

இ-நூலக தன்னியமாக்கல் செயற்பாடானது வடமாகாணத்தை பொறுத்தவரையில் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. எனினும் 2017ம் ஆண்டு ஒரு அதிகரித்த செயற்பாட்டை வரைவு 1 இல் காணக்கூடியதாகவுள்ளது. இவ் அதிகரிப்புக்கான காரணம் இலங்கை மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2017ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட இ-நூலக தன்னியமாக்கல் செயற்திட்டமாகும்.

மாவட்ட ரீதியான இ-நூலகம் தன்னியமாக்கல் செயற்பாட்டை கருத்தில் எடுத்துக்கொண்டால். யாழ்.மாவட்டம் 70வீத பரம்பலை கொண்டதாக முன்னிலையில் காணப்படுகின்றது. இதற்கு நூலகங்களின் எண்ணிக்கையைக் காரணமாகக் குறிப்பிடலாம். அத்துடன் நூலக தன்னியமாக்கல் செயற்திட்ட வல்லுநர்கள் அங்கு காணப்படுகின்றமையும் ஒரு காரணமாக குறிப்பிட முடியும்.


விளக்கப்படம் 1 மாவட்ட ரீதியான இ-நூலக தன்னியமாக்கல் செயற்பாடுகள்.




| நூலக வகை | நூலக எண்ணிக்கை |
|---|---|
| பொது | 09 |
| கல்வி | 19 |
| காப்பகம் | 01 |

விளக்கப்படம் 1: மாவட்டரீதியான இ-நூலக தன்னியமாக்கல் செயற்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரைபு 1: ஆண்டு சார்பான வடமாகாணத்தின் இ-நூலக தன்னியமாக்கல் மாற்றங்கள்

இ-நூலக தன்னியமாக்கல் அமைப்பை பயன்படுத்துவதில் ஒப்பீட்டளவில் வவுனியா இரண்டாம் கட்டத்தை எட்டுகின்றது. வவுனியா மாவட்டத்திலும் ஒப்பீட்டளவில் அதிகளவில் அதிகளவான நூலகங்கள் காணப்படுவதும் பல்கலைக்கழக நூலகம் மற்றும் நகரசபை நூலகங்கள் அங்கு காணப்படுவதும் ஒரு காரணமாகும். நூலகங்கள் இ-நூலக தன்னியமாக்கல் செயற்பாட்டை ஆரம்பித்தாலும் எவ்வளவு தூரம் அவற்றை தொடர்ச்சியாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்துகிறார்கள் என்பது கேள்விக்குறியாகும்.

## பயன்படுத்தும் அளவு

இ-நூலக தன்னியமாக்கலை முற்றுமுழுதாக பயன்படுத்தும் நிறுவனம் எனும் பெருமையை யாழ்.பல்கலைக்கழக நூலகம் வடமாகாணத்தில் பெறுகின்றது. இங்கு நூற் கொள்வனவு பட்டியலாக்கம், பிரதி பட்டியலாக்கம், பார் கோடிங், ஸ்பைன் லேபலிங், வாசகர் பதிவு, வாசகர் அட்டை, நூற்சுழற்சி, ஒன்லைன் நூற்தேடல், பல்வகை அறிக்கை தயாரித்தல், மின்னஞ்சல் சமிக்ஞைகள் மற்றும் இருப்பெடுப்பு என்பன இ-நூலக தன்னியமாக்கல் செயற்பாடாக காணப்படுகின்றது. இவ்வாறே யாழ்.பொது நூலகமும் ஓரளவு முற்றுமுழுதான நூலக தன்னியமாக்கல் செயற்பாட்டை மேற்கொள்கின்றது எனலாம். இங்கு நூற்கொள்வனவு தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் தன்னியமாக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் காணப்படும் ஏனைய பொது நூலகங்கள் பட்டியலாக்கம் பார்கோடிங், ஸ்பைன் லேபலிங், ஒன்லைன் நூற்தேடல் என்பவற்றையே அதிகம் பயன்படுத்துகின்றன. இவற்றில் சுன்னாகம் பொதுநூலகம் நவீன இ-நூலக பக்கத்தை வடிவமைத்து கொண்டுள்ளது. இங்கு புதிதாக நூலகத்தினால் கொள்வனவு செய்யப்படும் நூல்களின் அட்டைப்பக்கம் தன்னிய முறையில் காட்சிப்படுத்தப்படுகின்றது. அத்துடன் இ-நூலக பக்கம் பற்பல நூலகவிபரங்களுடன் ஒரு நூலகத்தின் இணையப்பக்கமும் காட்சி தருகின்றது. கல்வி நூலகங்களின் வகையை கருத்திற்கொள்ளும்போது யாழ் பல்கலைக்கழக நூலகத்தைத்தவிர ஏனைய கல்வி நூலகங்கள் அதாவது பாடசாலை நூலகங்கள், அடிப்படையான செயற்பாடுகளுக்காகவே இ-நூலகத்தை பயன்படுத்துகின்றது. அவை பட்டியலாக்கம், நூற்தேடலுடன் அவற்றில் செயற்பாடுகளை கட்டுப்படுத்திக்கொள்வதை காணக்கூடியதாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்தில் காணப்படும் இன்னொருவகை நூலகம் காப்பகமாகும். இதுவும் அடிப்படை நிலையிலேயே இ-நூலக அமைப்பை பயன்படுத்துகின்றது. ஏனெனில் இங்கு நூல்சுழற்சி இடம்பெறுவதில்லை என்பது ஒரு காரணமாக இருக்கலாம். அதாவது நூல்சூழற்சியானது காப்பகங்களில் பொதுவாக இடம்பெறுவதில்லை.

மேலும் தற்போது பல நூலகங்கள் வடமாகாணத்தில் ஒன்லைன் இ-நூலக சேவைகளை தொடங்கியுள்ளன. உதாரணமாக யாழ்.பல்கலைக்கழக நூலகம், வவுனியா வளாக நூலகம், யாழ்.பொது நூலகம், மானிப்பாய் பொது நூலகம், சுன்னாகம் பொது நூலகம், யாழ்.இந்துக்கல்லூரி நூலகம், இலங்கை இறையியல் கல்லூரி மற்றும் இலங்கை கலைக்காப்பகம் என்பன இச்சேவையை வழங்கி வருகின்றன.

மேலும் இ-நூலக அமைப்புக்கான சேவர் இணையத்துடன் முறையாக இணைக்கப்படும்போது நூல்களின் அட்டைப்பக்கங்கள் தானாகவே எடுத்து காட்சிப்படுத்தும் வசதியை கொடுப்பதால் ஒன்லைன் சேவைகளின்போது நூல்களின் அட்டைப்பக்கம் தானாகவே காட்சிப்படுத்தப்படும் சேவையும் வழங்கப்படுகின்றது.

## இ-நூலக தன்னியமாக்கல் செயற்பாடுகள்

ஒரு இ-நூலக தன்னியமாக்கலை மேற்கொள்ள வேண்டுமாயின் அங்கு பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. தேவையான செயற்பாடுகளை ஒழுங்கு முறைகளினூடு செயற்படுத்தும் போதே ஒரு தொகுதியை நிறுவிக்கொள்ள முடியும். நிறுவிக்கொள்வதுடன் இதன்செயற்பாடு நிறைவடைந்துவிடுவதில்லை. அந்த தொகுதியை முறைப்படி பராமரிப்பதும் மிகவும் அவசியமான செயற்பாடாக காணப்படுகின்றது. அவ்வகையில் கீழ்வரும் செயற்திட்டங்கள் முக்கியமானவையாக காணப்படுகின்றது.

## நூலக நிலைமை பற்றிய ஆய்வு

நூலகத்தின் அமைவிடம் கிளை நூலகங்களின் அமைவிடம் அவற்றின் பெயரின் சுருக்கக் குறியீட்டுமுறைகள், நூல்பகுப்பு வகைகள், நூற்சுழற்சி கட்டுப்பாடுகள், வாசகர் வகைகளும் நூற்சுழற்சி தன்மைகளும், நூல் இறாக்கைப்படுத்தியுள்ள இடங்கள் அல்லது நூலக பிரிவுகள், நூல் ஈட்டல் முறைகள், முகாமைத்துவ அமைப்புக்கள், கணினி வசதிகள், தரவு வலையமைப்பு அமைப்புக்கள், இருப்பெடுப்பு முறைகள், பார்கோடிங் முறை, ஸ்பைலேபல் பயன்படுத்தும் முறைகள், நூலக அலுவலர்களின் பகுப்பு முறைகள், வேலைப்பகுப்பு முறைகள் அவர்களின் அறிவு மட்ட நிலைகள், வாசகர் அங்கத்துவ அட்டை அமைப்புக்கள், நூற்பதிவேட்டின் அமைப்பு, அறிக்கை இடப்படும் முறைகள், நூலகங்களின் விசேட விடுமுறை நாட்கள், மற்றும் வாசகர் சமிக்ஞைமுறை பற்றிய ஆய்வுகளை பொருத்தமாக மேற்கொண்டே ஒரு நூலக அமைப்பை தயார் செய்ய வேண்டும். அது மட்டுமல்லாது பொருத்தமானதும் தேவைப்படுவதுமான தரவுகளை சேகரித்து வைத்துக்கொள்ளவும் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலக முறைமை நிறுவுதல்

சேவர் கணினியைத் தயார் செய்துகொண்டவுடனே தேவைப்படும் மென்பொருட்களை சேகரித்துக்கொள்ள வேண்டும். இவ் மென்பொருட்கள் புதிய பரிமாணங்களுடன் உள்ளனவா என பரிசோதித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறுபுதிய பரிமாணங்களுடன் காணப்படும் இடத்து அவை ஒன்றுக்கொன்று ஒத்திசைவைக் கொண்டுள்ளனவா என அவற்றின் புதிய பரிமாண அறிக்கைகளை ஆராய்ந்து தெரிந்து கொள்வதுடன் பரிசோதனைக்கு உட்படுத்தியும் பார்க்கவேண்டும். தேவை ஏற்படின் உரிய மேலதிக ஆலோசனைகளை வல்லுனர்களிடம் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்.

ஆரம்ப ஆய்வுகளின் பின்னர் ஒழுங்கு முறையில் ஒவ்வொரு மென்பொருள் கூறுகளையும் நிறுவிக்கொள்ள வேண்டும். தேவை ஏற்படின் வல்லுனர்களிடம் உதவிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்சொன்ன வேலைகளை செய்வதற்கு பொருத்தமான மென்பொருளை கையாளும் அறிவு ஒருவருக்கு அவசியமாகின்றது.

மென்பொருட்களை ஒழுங்குமுறையில் நிறுவுவதன் மூலம் ஒரு பொருத்தமான இ-நூலக முறைமைக்கான தளத்தை அமைத்துக்கொள்ளலாம். அமைத்துக்கொண்ட முறைமையினை பொருத்தமாக சீர் செய்வதன் மூலம் ஒரு நிறைவான இ-நூலக முறைமையை அமைத்துக்கொள்ளலாம்.

## தரவு மாற்றீடு

ஒரு இ-நூலக தளத்தை அமைத்துக்கொண்டவுடன் எற்கனவே நூலகத்தினால் பயன்படுத்தப்பட்ட அல்லது Excel போன்ற கோப்புக்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள தரவுகளை பொருத்தமான செயற்பாடுகள் மற்றும் மாற்றீடு அமைப்புக்களின் ஊடாக உருவாக்கப்பட்ட தளத்திற்கு மாற்ற வேண்டும். மாற்றும்போது தரவு சிதறாமல் பொருத்தமான முறைகளில் ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படுவதற்கான ஆரம்ப வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்சொன்ன முறைகளில் நூல்விபரங்கள், வாசகர் விபரங்கள், நூற்சுழற்சி விபரங்கள், நூற் கொள்வனவு விபரங்கள் போன்றவற்றை புதிய தளத்திற்கு மாற்றிக்கொள்ள முடியும்.

## முறைமை ஒருங்கிணைப்பு

மேற்சொன்ன ஆரம்ப வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் சேவர்கணினியுடன் ஏனைய கணினிகள் தொடர்பாடல்களை மேற்கொள்ளக் கூடியவகையில் வலையமைப்பு ஜீ முறையினை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். பொருத்தமாக (Backup) பக்கம் எடுக்கும் அமைப்பை நிறுவி துணைக்கணினிகளில் இருந்து தேவைப்படும் நேரத்தில் Backup இணை எடுத்துக்கொள்ளும் முறையை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

மேலும் ஒன்லைன்சேவைகளை மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்களையும் பூர்த்தி செய்யவேண்டும். இங்கு பொருத்தமான


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டொமையின் பெயர்களை பதிவு செய்து கொள்வது முதல் பொருத்தமான வெளித்தொடர்பாடல் மென்பொருட்களை தயார்செய்து நிறுவிக்கொள்ளவும் வேண்டும்.

## பயிற்சிகளும் ஆலோசனைகளும்

நிறுவப்பட்ட ஒரு இ-நூலக தன்னியமாக்கல் முறைமையினை பொருத்தமாக பயன்படுத்துவது பற்றிய அறிவு சகல நூலகர்களுக்கும் தேவைப்படும் ஒரு அடிப்படை விடயமாகும். அந்த வகையில் உரிய பயிற்சிகளை மேற்கொண்டு சகல மனித வளங்களையும் அவ் இ-நூலக முறைமைக்குள் உள்வாங்கவேண்டும். இப்பயிற்சிகள் பல்வேறு நூலக நடவடிக்கைகள் சார்ந்து தனித்தனி பயிற்சிகளாக மேற்கொள்ள வேண்டும். பயிற்சிகளின் நிறைவில் இத்தொகுதியை தொடர்ச்சியாக பயன்படுத்தும் காலத்தில் பல்வேறு கேள்விகளும் பிரச்சினைகளும் உதயமாகலாம். இதற்கு பொருத்தமான தீர்வுகள் கிடைக்கப்பெறவேண்டும். இதற்கு பொருத்தமான ஆலோசனைகளை வல்லுனர்களிடம் இருந்து பெறுவதினூடாக சரிசெய்து கொள்ள முடியும்.

## முடிவுரை

இலங்கை வடமாகாணத்தில் இலத்திரனியல் நூலக தன்னியமாக்கல் நடைமுறை பற்றிய இக்கட்டுரை பல கோணங்களில் அவற்றை கண்டுள்ளது. அதாவது மாவட்ட ரீதியான செயற்பாடுகள், நூலக வகைகளின் அடிப்படையில் அவற்றின் செயற்பாடுகள், எந்தளவில் நூலகங்கள் இவ் இ-நூலக முறைமையை பயன்படுத்துகின்றன மற்றும் எவ்வாறு ஒரு இ-நூலக தன்னியமாக்கல் முறைமை நிறுவிக்கொள்ளப்படுகின்றது போன்ற விடயங்கள் இங்கு கண்டுகொள்ளப்பட்டுள்ளன.

இங்கு விசேடமாக குறிப்பிடக்கூடிய விடயங்களாவன வடமாகாணத்தில் தன்னியமாக்கம் செய்யப்பட்ட நூலகங்களில் யாழ்.மாவட்டத்தின் நூலகங்கள் எனும் விகிதத்தில் அதிகளவான நூலகங்கள் தன்னியமாக்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படைத் தேவைகளான பட்டியலாக்கம் மற்றும் நூற்தேடலுக்காக மட்டுமே இலத்திரனியல் துறை அமைப்பை நிறுவியுள்ளன. இவற்றில் யாழ்.பல்கலைக்கழக நூலகமே அதிகளவான செயற்பாடுகளை இ-நூலக முறைமையினூடாக மேற்கொள்கின்றது. அத்துடன் ஒரு இ-நூலக முறையை நிறுவிக்கொள்வதானது பல படிமுறைகளுக்கு ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இக்கட்டுரையில் விசேடமாக காணக்கூடிய விடயம் யாதெனில் வடமாகாண நூலகங்கள் தொடர்ச்சியாக அதிகரித்த விகித்திலேயே தன்னியமாக்கல் அமைப்பை உள்வாங்கி வருகின்றனர். எனவே எதிர்காலத்திலும் இவ்வாறான இ-நூலக செயற்றிட்டத்தின் மூலம் பற்பல நூலகங்களை தன்னியமாக்கம் செய்து வடமாகாணத்து நூலகங்களை முன்னிலையில் நிறுத்துவதற்கு நாம் அனைவரும் பாடுபடுவோமாக.

நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்துவரும் ஊடகப்பயன்பாடும் அருகிவரும் வாசிப்புப் பழக்கமும்

**செல்வி.சி.ரஞ்சிதா**
தற்காலிக விரிவுரையாளர்,
மொழியியல்த்துறை,
களனி பல்கலைக்கழகம்.

இன்றைய அறிவுமைய நூற்றாண்டில் கல்வி இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. ஒரு சமூகம் அறிவு என்னும் ஆரோக்கியத்தைப் பெற்று சிந்திக்கவேண்டுமெனில் கல்வி அவசியமாகின்றது. கல்வியில் தன்னிறைவை பெறவேண்டுமானால் கற்பித்தல் என்னும் செயற்பாட்டிற்கு அப்பால் சுயமாக கற்றுக்கொள்ளுவதும் அவசியமாகும். சுயகற்றல் வலியுறுத்தப்படும்போதே அங்கு "வாசிப்பு" என்னும் பேசுபொருள் உள்நுழைந்துவிடுகின்றது. வாசிப்பு என்பதற்கு பலரும் பல விதமான வரையறைகளை கொண்டுள்ளனர். உண்மையில் வாசிப்பு என்பது புத்தகம், பத்திரிகை, துண்டுபிரசுரம், சஞ்சிகை முதலியவற்றை தாமாக முன்வந்து வாசித்து அவை தரும் கருத்துக்களை உள்வாங்கி கிரகித்து சிந்தித்தல், நினைவில் நிறுத்துதல், படைப்பாளுமையை வளர்த்துக்கொள்ளுதல் என்னும் செயற்பாட்டுடன் தொடர்புடைய ஒரு பதமாகும். வாசிப்பின் மகத்துவத்தை உணர்ந்தே உலகப்புகழ்பெற்ற நாவலாசிரியர் "ஷேக்ஸ்பியர்" பிறந்த தினமான ஏப்ரல் 23 உலக வாசிப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை இலங்கையில் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் "தேசிய வாசிப்பு மாதம்" ஆகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பிள்ளை கருவறையில் இருக்கும்போதே அப்பிள்ளையின் தாய் வாசிக்கவேண்டும் என்றும் அப்பொழுதே அப்பிள்ளையின் மூளை விருத்தியடையும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் வாசிப்பு என்பது கருவிலேயே ஆரம்பிக்கப்படவேண்டும் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது. "எழுத்தறிவு இல்லாதிருப்பது பெரியதோர் குற்றமல்ல. ஆனால் எழுத்தறிவு இருந்தும் வாசிக்காமல் இருப்பதுதான் பெரிய குற்றமாகும்." என அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வாசிப்புத்திறன் இன்று நம்மிடையே அருகிவருகின்றமை கவலைக்குரிய ஒருவிடயமாக காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாகவும் மூலக் காரணமாகவும் விளங்குவது ஊடகப்பயன்பாட்டின் அதிகரிப்பே ஆகும். 21 ஆம் நூற்றாண்டை அறிவுமைய நூற்றாண்டு என கூறுவதற்கு ஊடகங்களின் செல்வாக்கும் சிறுவர் முதல் இளையோர் வரை இதன் பயன்பாடு அதிகரித்து வருவதுமே காரணமாகும் என எண்ணத்தோன்றுகின்றது. Internet, Phone, Viber, Whatsapp, Twiter, Facebook, Imo, TV என ஊடகங்களை கையாள்வதுடன் தகவல் தொழில்நுட்பத்துடன் தன்னை இணைத்துக்கொண்டமையால் வாசிப்புப் பழக்கமும் அருகியுள்ளது. ஒரு சமூகத்தில் வாழும் பிள்ளைகளின் சிறந்த ஆரோக்கியமான வாசிப்புத்திறனுக்கு தடையாக பல காரணிகள் இருக்கின்றபோதும் ஊடகங்களின் தாக்கம் அதிகமாக இருப்பதால் அவற்றையே வாசிப்பிற்கு தடையான காரணியாக இக்கட்டுரையில் குறிப்பிடவுள்ளோம். அவ்வகையில் இக்கட்டுரையானது வாசிப்பின் முக்கியத்துவத்தையும் அதற்கு இடையூறாக விளங்கும் ஊடகங்களின் பாதக விளைவுகள் பற்றியும் விரிவாக ஆராய்கின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"Read for fun", "Read for Pleasure" என்னும் ஆங்கில வார்த்தைகள் மகிழ்ச்சிக்காக வாசித்தல், பொழுதுபோக்கிற்காக வாசித்தல் என்னும் அர்த்தத்தை தருகின்றன. மகிழ்ச்சி, பொழுதுபோக்கு என இவ்விரண்டு விடயங்களுக்குமாக வாசித்தல் இன்றைய நூற்றாண்டில் சொற்ப அளவேணும் இல்லை என்றே கூறவேண்டும். ஒரு பிள்ளையின் சிறந்த உளவிருத்திக்கு வாசிப்புத்திறன் அவசியமாகின்றது. அண்மையில் நடைபெற்ற ஆய்வுகளில் ஒரு பிள்ளையின் எழுத்தாற்றல் குறைவாக இருப்பதற்கு வாசிப்புத்திறன் குறைவாக இருப்பதே காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் குறைந்த வாசிப்புத் திறனால் ஒரு விடயத்தை கிரகிக்க முடியாமை கேட்கப்படும் வினாவிற்கு பதிலளிக்க முடியாமை, சபையில் அறிஞருடன் விவாதிக்கமுடியாமை என பல்வேறு இடையூறுகளுக்கு இன்றைய தலைமுறையினர் முகங்கொடுத்துள்ளனர்; முகங்கொடுத்து வருகின்றனர். ஒரு நேர்முகத்தேர்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு கேட்கப்படும் பொது அறிவுதொடர்பான வினாக்களுக்கு சரியான விடையளிக்கமுடியாமலும், இன்று போட்டிப்பரீட்சைகளில் குறைந்தளவில் புள்ளிகளைப்பெற்றுக்கொள்ளவும் வாசிப்புத்திறன் போதாமையே முக்கிய காரணமாக அமைகின்றது.

வாசிப்பிற்கு வழிகாட்டும் ஒரு கருவியாக நூல்நிலையங்கள் விளங்குகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் 80 இற்கும் அதிகமான பொது நூலகங்கள் மாணவர்களின், பொதுமக்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்தி வருகின்றன. எனினும் வாசிப்பின் மகத்துவத்தை உணர்ந்து நூலகங்களையும் நூல்களையும் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இன்று இலங்கையின் எழுத்தறிவு வீதம் 90% இற்கும் அதிகமாக இருப்பது பாராட்டத்தக்கதே. இது பரீட்சையையும் பெறுபேறுகளையும் மையப்படுத்தி பெறப்பட்ட அறிவு வீதமே தவிர முறையான ஆழமான வாசிப்பும் அதனால் உண்டான ஆற்றல்களாலும் பெறப்பட்ட அறிவு வீதமாக குறிப்பிடமுடியாது. சர்வதேச நூலக சம்மேளனம் "தகவல்களைத் திரட்டவும், சுதந்திரமான தீர்மானங்களை மேற்கொள்ளவும், திறன்களைப் பெற்றுக்கொள்ளவும், கலாசார மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவும் வகையில் நூல்நிலையங்கள் சுதந்திரமாகவும் திறமைவாய்ந்ததாகவும் அதனைப் பயன்படுத்தக்கூடியதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்." என்னும் எண்ணக்கருவை முன்வைக்கின்றது. இவ் எண்ணக்கருவினூடாக நூல் நிலையங்களை மையப்படுத்தி வாசிப்புத்திறனை வளர்த்துக்கொள்ளவும் அதனால் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குவதையும் சர்வதேச நூலக சம்மேளனம் எதிர்பார்க்கின்றது. எனினும் அவை வெறும் கருத்தளவில் மட்டுமே உள்ளன. காலத்திற்கு காலம் நடாத்தப்படும் வாசிப்பு மாத ஊக்குவிப்பு, அதனையொட்டி நடைபெறும் போட்டிகள், நினைவூட்டல்கள் வெறும் பேச்சளவில் மட்டுமே உள்ளன. ஊடகங்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் நூல்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதற்கு காரணம் மாணவர்கள் மத்தியிலும் ஏனையோர் மத்தியிலும் ஊடகங்களுக்கு வழங்கப்படும் வரவேற்பு உபசாரமாகும்.

ஊடகங்கள் சமூகத்திற்கு நன்மையளிக்கவில்லை என கூறி அவற்றை புறந்தள்ளமுடியாது. தகவல்தொழில்நுட்ப வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளப்பரியதுதான். உடனுக்குடன் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், புதியவற்றைக் கற்றுக்கொள்ளவும் ஊடகங்கள் வழிவகுத்துள்ளன. E book, E Library என்பவற்றின் மூலம் இணையத்திலேயே மின் நூலாக வாசித்தல், நூலகங்களைப் பயன்படுத்துதல், ஒலிப்புத்தகம், காணொளி வழி வாசித்தல் இன்று புதுமையான ஒன்றாக இருக்கின்றது. இருப்பினும் இணையத்தளத்தை பயன்படுத்தும்போது நம்மை அறியாமலேயே சில ஆபாச காட்சிகளை, படங்களை பார்வையிடும் சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன. இதனால் மாணவரின் கவனம் சிதறடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. ஒரு புத்தகத்தை கைகளில் எடுத்து அதனை இரசித்து வாசிக்கும் பழக்கம் நம்மவரிடையே அருகிவருகின்றது.

வளர்ந்து வரும் சமுதாயத்தில் சிந்தனைத்திறனை, நினைவாற்றலை, பேச்சு ஆளுமையை, சொல்வளத்தை, உள்ளத்திற்கு சிறந்த பயிற்சியை அளிக்கும் அளப்பரிய பணியை நல்ல புத்தகங்களைத் தவிர வேறு எந்தவொரு ஊடகத்தாலும் செய்யமுடியாது. எனினும் ஊடகங்களின் ஊடுருவல் அது இன்று சிறுவர் முதல் இளையோர் வரை ஏற்படுத்தியுள்ள போலியான நம்பகத்தன்மைகள் வாசிப்புப் பழக்கத்தையும் இல்லாது ஒழித்துள்ளது. அண்மையில் வலைத்தளங்களில் மருத்துவ நிபுணர்கள் வெளியிட்ட ஆய்வினூடாக இணைய பாவனை காரணமாக அதிகளவில் மக்கள் மனநிலை பாதிக்கப்படுகின்றனர் என கூறுகின்றனர். மேலும் இலத்திரனியல் ஊடகங்கள், இணையம் போன்றவை முறைகேடாய் பயன்படுத்துவதும் அவற்றுக்கு மக்கள் அடிமையாதலும் அபாயகரமான மட்டத்தை அடைந்துள்ளதாகவும் மருத்துவ அறிக்கை குறிப்பிடுகின்றது. இலங்கையில் இணையப்பாவனை 32% இற்கும் அதிகமாக காணப்படுவதாக புள்ளிவிபரத் தரவுகள் தெரிவிக்கின்றன. இலங்கை தகவல்தொடர்புகள் ஒழுக்காற்று ஆணையத்தின் தகவல்படி 2009 ஆம் ஆண்டில் 90,000 இற்கும் அதிகமாக இருந்த மொபைல் புரோட்பாண்ட் சந்தாக்கள் 2017 ஆம் ஆண்டில் 4 மில்லியனுக்கும் மேலாக அதிகரித்துள்ளதாக குறிப்பிடுகின்றன. வருடத்திற்கு வருடம் அதிகரிப்பு காணப்படுவதுடன் இவை சமூக அறிவு வளர்ச்சியையும் வாசிப்புப் பழக்கத்தையும் மழுங்கடித்தே வருகின்றன.

Public Library
Jaffna

“பாடசாலை மாணவர்களும் அதிகரித்த கைத்தொலைபேசி பாவனையும் அதன் தாக்கங்களும்” என்னும் தலைப்பில் அல் முர்ஷிட் மகாவித்தியாலயத்தில் 8-13 ஆம் தரம் வரையுள்ள மாணவர்களை மையப்படுத்தி செய்யப்பட்ட ஆய்வொன்றில் சிறந்த ஆளுமையற்ற, புத்தகங்களில் நாட்டமற்ற மாணவர்கள் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். கையடக்கத்தொலைபேசியின் பாவனை மொத்த மாணவர்களில் அரைவாசியாக ஒவ்வொரு தரத்திலும் இனங்காணப்பட்டுள்ளது. மேலும் கையடக்கத் தொலைபேசியினூடாக ஆபாச படங்களை பார்த்தல், குறுஞ்செய்திகள் அனுப்புதல், தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என பல பாதகமான காரணிகள் இவ் ஆய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளன. அல் முர்ஷிட் வித்தியாலயம் மட்டுமன்றி எமது நாட்டிலுள்ள ஒவ்வொரு பாடசாலை மாணவர்களும் இவ்வாறான கையடக்கத்தொலைபேசி பாவனையால் பாதிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் அண்மையில் (2017 டிசம்பர் - 2018 மார்ச் வரை) நடத்தப்பட்ட சமூக வலைத்தளங்களின் பாவனை தொடர்பான ஆய்வறிக்கையொன்று இலங்கை மக்களின் ஊடகப் பாவனைத்தொடர்பான தரவுகளை முன்வைக்கின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| சமூக வலைத்தளங்கள் | எண்ணிக்கை (வீத அடிப்படையில்) |
|---|---|
| WhatsApp | 97% |
| Viber | 49% |
| Facebook | 90% |
| Instagram | 79% |
| Linkedin | 49% |
| Twiter | 39% |
| Snapchat | 39% |
| Google + | 24% |
| Youtube | 81% |
| others | 5% |

இலங்கையில் 63% Andriod கையடக்கத் தொலைபேசியையும் 36% IOS கையடக்கத்தொலைபேசியையும் பயன்படுத்துகின்றனர். பிள்ளைகள் முதல் பெரியோர் வரை ஊடகங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தினாலும் அழுத்தத்தினாலும் வாசிப்புப் பழக்கம் வீழ்ச்சிப்படியை நோக்கி இறங்கிக்கொண்டிருக்கின்றது.

மேற்படி தரவுகளை நோக்கும்போது ஊடகங்களின் பாவனையினால் வளர்ந்து வரும் இளையோர் முறையற்ற வழியில் பயணிப்பதையும் அவை வாசிப்பு மீதான தாக்கத்தைச் செலுத்துவதையும் அறியமுடிகின்றது. வாசிப்பின் அண்மைக்கால போக்குகளில் இலங்கையில் நடந்த சில உண்மைச் சம்பவங்கள் பின்வருமாறு பதிவாகின்றன.

- ஆசிரியர் பயிற்சி கலாசாலையொன்றில் உள்ள நூலகத்தின் அலுமாரி பூட்டுகள் இறுகிக் கறள் படிந்திருந்தமையால் அவற்றைத் திறப்பது கஷ்டமாக இருந்தமை.

- மாநகரசபை நூலகமொன்றில் புத்தக அலுமாரிச் சாவி தொலைந்து பல நாட்களாகியமையால் குறிப்பிட்ட தினத்தில் தேவையான நூலை பெறமுடியாமல் இருந்தமை.

- யாழ்ப்பாண பிரதேசத்திலுள்ள 19 பிரதேச சபை நூலகங்களிலும் நூல் இரவல் பெறுவோரின் எண்ணிக்கை குறைவாக இருந்தமை.

- ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுதல், வாசிக்கத் தூண்டுதல், நல்ல இரசனையை ஏற்படுத்துதல் முதலான நோக்கங்களுடன் அண்மைக்காலமாக வெளிவந்த தெரிதல் என்னும் சஞ்சிகையை (5/-) இதழொன்றினை ஆசிரியர்கள் வாங்க மறுத்தமை.

இவை போன்ற இன்னும் பல சம்பவங்கள் வெளிவராது பொருட்படுத்தப்படாது இருக்கின்றன. ஊடகங்கள் ஒரு பக்கம் அதீத வளர்ச்சியுடன் மாணவர் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்குவதுடன் இன்னொரு பக்கம் வாசிப்புப் பழக்கம் சரிவைநோக்கிச் செல்லவும் வழியமைத்து வைத்துள்ளன. எனவே மூளைசாலிகளையும் புத்திஜீவிகளையும் படைப்பாளுமை மிக்கவர்களையும் சுயமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கும் ஆற்றல் உடையவர்களையும் உருவாக்குவதற்கு இளையோர் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும். "ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது." என விவேகானந்தர் குறிப்பிடுகின்றார். "எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப்படுகின்றதோ அங்கு விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள்." என சேகுவேரா குறிப்பிடுகின்றார். இதன் மூலம் புத்தகங்களினதும் வாசிப்பு பழக்கத்தின் மீதும் அறிஞர்கள் காட்டிய ஈடுபாட்டினை நன்கு அறியமுடிகின்றது.

இன்று சிறந்த மாணவர்களை உருவாக்கி சமுதாயத்திற்கு அவர்களை அறிவுள்ளவர்களாக அளிப்பதில் பாடசாலைகளுக்கு தனித்துவமான ஒரு இடம் உண்டு. ஆசிரியர்களும் அதிபர்களும் மாணவர்களினது வாசிப்புத்திறனையும் கருத்தில் கொண்டு பாடசாலை மட்டத்தில் நிலையான திட்டங்களை வகுத்து தொடர்ந்து அவற்றை செயற்படுத்த வேண்டும். குறிப்பாக நூல்களை மட்டும் வாசிக்க பயிற்சி அளிக்காது வாசித்த நூல்கள் தொடர்பாக மாணவர்களின் அபிப்ராயங்களை கேட்டறிதல், கட்டுரை, சிறுகதை, கவிதை போட்டிகளை நடாத்துதல், பரிசில் வழங்குதல் என வாசிப்புடன் தொடர்புடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வழிசமைக்கவேண்டும்.

பாடசாலைகள் மட்டுமன்றி பெற்றோர்களும் சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு வாசிப்பின் மீதான தாகத்தை ஏற்படுத்த ஆவன செய்யவேண்டும். பிள்ளைகளின் பிறந்த தினம் அல்லது அவர்களது சாதனைகளின்போது புத்தகங்களை பரிசளிக்கவேண்டும். வீட்டிற்கு அண்மையில் உள்ள நூலகங்களில் அங்கத்தவராக இணைந்து வாசிப்பதற்கு அவர்களைத் தூண்டவேண்டும். முடிந்தவரை கையடக்கத்தொலைபேசி, சமூகவலைத்தளங்கள், தொலைக்காட்சி ஆகியவற்றின் பயன்பாடுகளை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஊடகங்கள் எம்மை வளர்ப்பனவாக இருக்கின்றனவே தவிர எமது வாசிப்பு மீது தடை செலுத்தும் ஒன்றாக இருக்கக்கூடாது என்பதையும் இளையோர்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். அதுமட்டுமன்றி இலங்கையிலுள்ள பாடசாலைகள் அனைத்தையும் மையப்படுத்தி மாணவர்களின் வாசிப்புத்திறன் தொடர்பான ஆய்வொன்றை நடாத்தி ஆய்வறிக்கையொன்றை தயாரிப்பதற்கும் வாசிப்பை தடைசெய்யும் முறையான காரணிகளை கண்டறிவதற்கும் ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் முன்வரவேண்டும். வாசிப்புப் பழக்கத்தை சிரம் மேற்கொண்டு ஒரு கடமையாக செய்து வாழ்க்கையில் வெற்றிபெற்ற அறிஞர்களைப் பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறுதல் வேண்டும். வாசிப்பினூடாக சிறந்த சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான பணியை முன்னெடுத்துச் செல்வது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

<u>துணை நூல்கள்</u>


1. **ஜெயபாலன், தமிழுக்கு உதவாத ஊடகங்கள், கீற்று இணையத்தளம் வெளியீடு, 2009.**
2. **ராமகிருஷ்ணன்.எஸ்., நானும் சில புத்தகங்களும், அகவிழி சஞ்சிகை வெளியீடு, 2005.**
3. **யோகராசா.செ., சமகால வாசிப்பு அதிர்வுகளும் அடுத்த காலடியும், ஒக்டோபர், 2005.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reading inclination in the modern era

Mrs.Subajana Jeyaseelan
Senior lecture/English Language Teaching Dept
Vavuniya Campus

A man only learns in two ways, one by reading, and the other by association with smarter people. **By Will Rogers**

The ancient philosopher Sir Francis Bacon quoted as Reading makes a full man. In the rat race era, reading habit has deteriorated, for various reasons, among the present generation including the students as well as teachers and professionals. It is needless to say the libraries are turned into an oasis as students have become a dearth practice in the modern genre of technology. Ironically, everyone finds the easiest way by Googling to clear their doubts. In a nutshell, sadly, the younger generation seems that they have no thirst for reading.

In particular, one could also say, the students have a choice of distractions and diversions to engage their time after the arrival of various plethoras of social Medias. Many youths prefer to be active on social media, instead of involving in a simple activity such as reading books, newspapers, magazines and journals so on. Many youngsters plugged in the earphones while they are travelling on roads which mount the opportunity to occur fatal accidents. The constant use of technical devices affects their mental faculty and the eyesight on the long run. Surprisingly, many of the students are reading Degrees without reading. Even many teachers of English have lack of vocabulary collection because of the poor reading.

On the other hand, the entry of a smart phone has made the situation bad to worse. The younger generation frantically enslaves themselves to smart phones and spend unlimited time on it. Excess use of anything is good for nothing. Regrettably, even the university students, at the higher studies and research level, do not allocate time for a systematic reading to gather novel information, ideology and terminology. Escalating use of social media leads the students to mismanage their studies, reading and the progress .As an academic staff at the university, quite often I experience, many of the students write the assignments mechanically doing the eleventh hour of task as 'cut' and 'paste' which makes them lethargic learners and leads to plagiarism. Students also lose their talent and skill of critical thinking and analysing power. For instance, out of ten students only 2-3, students do the work genuinely taking the pain. It is not a positive sign to build up a healthy and wealthy society. Practically, reading reveals and digs up many unknown nuts and bolts. Also, it nourishes mental growth and intellectual sharpness. Reading good materials calm downs the stress and maintains the brain's stability to lead a happy life. Nowadays, people do lack of tolerance and involve in acrimonious fight, philosophically and spiritually thinks, which not needed as we are mortals. Therefore, exercising the reading habit gives everyone a lot of lessons to face the world and diverse personality of people.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Reading is an essential activity to enrich and widen every individual's knowledge to become critical learners in the practical world. Therefore, to steer them away from electronics and make them read a book would be a daunting task like climbing the Everest. So, parents and teachers should set the ball rolling. To put into practice, they can have a stipulated time frame at home and school for reading. A food for a thought, to reap a good harvest, everyone either in the academic or professional world should cultivate the habit of reading. Abraham Lincoln said, that all he had learned, he learned from reading books.

இந்த வாழ்வின் ஆகச் சிறந்த கேளிக்கை கொண்டாட்டம்
ஓசையின்றி நடக்கிறது அதுதான் புத்தக வாசிப்பு.

- எமர்சன் -

ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்
என்று கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன் என்றவர்

- மகாத்மா காந்தி -

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்

- ஆல்பர்ட் ஐன்சுடீன் -

படிப்புதான் ஒருவன் உயர வழி

- காமராஜர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நூலகம் ஒரு பார்வை

**திருமதி.கலைவாணி சுகந்தன்**
BA (Hons) PGDE (Dist) MED (2nd upper)
ஆசிரிய நூலகர்
வ/நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம்

ஒவ்வொரு கல்வி சார் நிறுவனமும் சிறப்புடன் இயங்குவதற்கும், மாணவரின் கல்விக் கலாசார ஆர்வங்களை ஊக்குவிப்பதற்கும் பாடசாலை நூலகம் முக்கிய கருவியாக இருக்கின்றது. "பாடசாலை நூலகம்" என்ற மரபு ரீதியான பெயரானது அவற்றின் நேக்கங்கள் குறிக்கோள் கருதி பாடசாலை நூலகம் மற்றும் கற்றல் வள நிலையம் (Library and learning resource center LLRC) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவே "பாடசாலை நூலக வளநிலையம் என்பது பல்வேறு ஊடகங்களைச் சேமித்து வைக்கும் ஒரு பௌதீக வெளி அல்லது பாடசாலை பண்பாட்டுச் சின்னங்கள் மற்றும் பெறுமானங்களை வெளிப்படுத்தும் நிறுவனமாகவும் இயங்குகின்ற ஒரு அமைப்பாகும். அவற்றின் அணுகு முறை, குழந்தைகளின் நன்னடத்தை மற்றும் ஆன்மிக மேம்பாடு மற்றும் அவர்களின் கல்விச் செயற்பாடுகளின் சமவாயப்புகளை பெறுவதற்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றது. உலகின் புதிய இலக்கியங்களுக்கும், தகவல்களுக்கும் இளைஞர்களை அறிமுகப்படுத்தும் உள்ளார்ந்த சக்தி நிறுவனமாகவும் இளைஞர்களின் திறன்களை விருத்தி செய்து நற்பண்புள்ள மனிதர்களாக உயர்த்தும் நிறுவனமாகவும் பாடசாலை நூலகம் விளங்குகின்றது" - **நூலக சங்கம்**

நூலகம் என்பது கல்வியை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் மக்கள் தொடர்பு சார்ந்த நிறுவனமாகும். ஒரு பாடசாலையில் இடம்பெறகின்ற கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உயிரூட்டும் மத்திய தளம் பாடசாலை நூலகங்களே ஆகும். "ஒரு பாடசாலையில் உள்ள அறைகளில் அதி முக்கியமானது நூலகமே ஆகும். மிகுந்த கவனத்தோடு தெரிவு செய்யப்பட்ட நல்ல நூல்கள் திரட்டப்பட்டு கிரகமாக உபயோகிக்கப்படுமாயின் அவ்விடத்தில் தான் உண்மையான கல்வி வளர்ச்சி ஏற்படும் என்று நாம் உறுதியாக கூற முடியும்" என கூறுகின்றார் அறிஞர் **ரிச்சாட் லிவிங்ஸ்டன்.**

பாடசாலை நூலகமானது மாணவர்களின் நூலக பயன்பாட்டை ஆரம்பித்து வைக்கும் நிறுவனமாக செயற்படுகின்றது. இந்நூலகம் மாணவர்களின் பாடவிதானத்தோடு தொடர்புடைய நூல்களையும் நூல்களைச் சேகரித்து வழங்குவதோடு பாடசாலைகளின் தரப் பொருளாதார, சூழல் என்பவற்றுக்கு அமையவே நூலகம் அமைந்துள்ளது. பாடசாலை நூலகமே மாணவர்களின் சிறுவயது முதல் வாசிப்பு உணர்வை உண்டாக்குவதற்கான களமாக காணப்படுகின்றது. இம் மாணவ சமூகம் வளர்ந்தவர்களான பின்பும் இப் பண்பு அவர்களிடம் இருக்கும். இதனால் சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் ஆரம்பப்பணி பாடசாலை நூலகங்களையே சாருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு கல்வி சார் நிறுவனமும் சிறப்புடன் இயங்குவதற்கு மாணவரின் கல்வி கலாசார ஆர்வங்களை ஊக்குவிப்பதற்கும் பாடசாலை நூலகமே முக்கிய கருவியாக இருப்பதால் அனைத்து வகையான தரமான பாடசாலைகளுக்கும் நூலகம் இருத்தல் அவசியமானதாகும். இப்பாடசாலை நூலகங்கள் கல்விக் குறிக்கோளை எய்துவதாக அமையப்பெற வேண்டியது முக்கியமானதாகும். நூல்களையும் மாணவர்களையும் இணைத்து வைத்து நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்காக இயங்குவதே பாடசாலை நூலகமாகும்.

## பாடசாலை நூலகத்தின் முக்கிய நோக்கம் மற்றும் செயற்பாடுகள்

1. பலதரப்பட்ட பொருட்துறைகளிலும் உள்ள சிறந்த தகவல் வளங்களின் சேகரிப்பை கொண்டிருப்பதுடன் பாடவிதானத்தோடு தொடர்புடைய அடிப்படை வாசிப்பிற்கு உதவக்கூடிய நூல்களையும் சேகரித்து வழங்குதல்.
2. பாடசாலைகளிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் அவரவர் கவனத்திற்கும் அறிவாற்றலுக்கும் ஏற்ற வகையில் நூல்களை வழங்குதல்.
3. நூல்களில் குறிப்பிடுகின்ற கருத்துக்களை உணர்ந்து அறிவினை விருத்தி செய்வதற்கான வாசிப்பு பழக்கத்தை ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஏற்படுத்தல்.
4. மாணவர்களுக்கு வீட்டு வாசிப்பிற்கு வேண்டிய நூல்களை வழங்குதல் மூலம் ஓய்வு நேரங்களை பயனுள்ளதாக கழிப்பதற்கு உதவுதல்
5. ஆசிரியர்களுக்கு அவர்கள் கற்பதற்கு பாடங்களுடன் தொடர்புடைய நூல்களையும் அவர்களது அபிவிருத்திக்கு உதவக்கூடிய நூல்களையும் வழங்குதல்.
6. மாணவர்களால் விரும்பப்படுகின்ற அல்லது அவர்களால் தேடப்படுகின்ற அனைத்துவகை அறிவுக்குமான சாதனங்களை வழங்குதல்.
7. உசாத்துணை சாதனங்களை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதன் ஊடாக மாணவர்களின் ஆளுமையை வளர்க்கக்கூடிய வகையில் வழியமைத்து கொடுத்தல்.
8. பாடசாலையை விட்டு நீங்கிய பின்னும் தமக்கென சொந்தமான சிறு நூலக மொன்றை கட்டியெழுப்பும் உணர்வை ஏற்படுத்தும் வகையில் தூண்டுதல்.
9. ஆசிரியரின் உதவி இன்றி சுயமாகவே நூல்களில் இருந்து விடயங்களை கற்றுக்கொள்ளும் ஆற்றலை மேம்படுத்தச் செய்தல்.
10. பிள்ளைகளை சமூகப்பொருத்தமுறச் செய்தல். அதாவது பாடசாலை சூழலோடும் அதற்கு அப்பால் நகரத்தோடும், நாட்டோடும், உலகத்தோடும் அவர்களை ஒன்றுபடுத்துதல்.

இவ்வாறாக பாடசாலை நூலகங்களின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் அமைந்து காணப்பட வேண்டியதாகும்.

## இலங்கையில் பாடசாலை நூலகங்கள்

இலங்கையில் உள்ள பாடசாலைகளின் நூலகங்கள் மேற்கு நாடுகளில் உள்ள நூலகங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. இதற்கு இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வந்த கல்வி முறையே பின்னணியாக அமைகின்றது. 1945 இல் இலங்கையில் இலவச கல்வி அறிமுகப்படுத்தபட்டதோடு பெரும்பாலான பாடசாலைகளில் இலவச கல்வியை வழங்கின. இந்த மாற்றத்தோடு பாடசாலை வளர்ச்சியினதும் முன்னேற்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படலாயிற்று. ஆயினும் மாணவர் வாசிப்புப் பழக்கம் மிகவும் மந்த நிலையிலேயே இருந்தது. பொழுதுபோக்கு வாசிப்பிற்குரிய நூல்கள் இந் நூலகங்களில் மிகவும் குறைவாகவே இருந்தன. அண்மைக்காலத்தில் பாடசாலை நூலகங்களின் முக்கியத்துவம் நாட்டில் உணரப்பட்டு வருவதை காணமுடிகின்றது.

பல பாடசாலைகளின் பொதுக்கல்வித்திட்டம் - 2 இன் கீழும் வேறுபல உதவித்திட்டத்தின் கீழும் நவீன முறையிலான நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவை சரியான முறையில் பேணப்படுவதில்லை என்ற குறைபாடுகள் காணப்படுகின்றன. இதற்கு பின்வருவன காரணமாக இருக்கின்றன.

1) அதிபர்கள் நூலக அபிவிருத்தியில் ஆர்வம் காட்டுவது குறைவாக இருத்தல்.
2) பாடசாலை நூலகத்திற்கு பொருத்தமான நூலகரோ ஆசிரிய நூலகரோ நியமிக்கப்படுவதில்லை.
3) நூலகம் தொடர்பான பயிற்சியற்ற ஆசிரியர்களே நூலகத்திற்கு பொறுப்பாக இருத்தல்.
4) நேர அட்டவணையில் மாணவர்களுக்கான பாடவேளையில் நூலகத்திற்கான பாடவேளை ஒதுக்கப்படுவதில்லை.
5) ஆசிரியர்களின் வாசிப்பு குறைபாடும் மாணவரை வழிப்படுத்திச் செல்வதில் செல்வாக்கு செலுத்துதல்.
6) நூலகச்செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை.
7) பரீட்சையை மையப்படுத்திய கல்வி முறையாகக் காணப்படுவதாலும் சித்தி வீதமும் முக்கியப்படுத்தப்படுவதாலும் வாசிப்பும் நூலகப்பயன்பாடும் முக்கியப்படுத்தப்படுவதில்லை.
8) பல பாடசாலைகளில் ஆசிரியர்களே நூலகர்களாகவும் கடமையாற்றுகின்றார்கள்.

## <u>பாடசாலை நூலகங்களில் வளர்ச்சிக்கு பிரதிகூலமாக அமையும் காரணங்களும் உள்ளன</u>

1) பாடசாலைகளின் நூலகங்களையும் நூலகர்களையும் பற்றி தெளிவானதொரு கோட்பாடு இன்மை.
2) பாடசாலையின் நூலகங்களையும் நூலகர்களையும் அலட்சியமாகக் கருதும் போக்கு.
3) பாடசாலைகளுக்கான நிதி ஒதுகீட்டில் திருப்திகரமற்ற நிலை காணப்படுதல்.
4) பாடசாலை அட்டவணையில் நூலகத்திற்கான நேரம் ஒதுக்கப்படாமை.
5) பாடசாலை நூலகத்திற்கான இடவசதி, தளபாட வசதி ஆகியவற்றின் குறைபாடு.
6) தற்காலத் தேவைக்கு ஏற்ப கட்புல செவிப்புல அறிவு சாதனங்கள் இன்மை.

## <u>பாடசாலை நூலகம் மற்றும் கற்றல் வளநிலயம் என்ற அலகினுள் தவிர்க்கபட வேண்டிய செயற்பாடுகளே இடம்பெறுகின்றன.</u>

1. கூட்டங்கள், ஒன்றுகூடல்கள் விருந்து உபசாரங்கள் போன்ற நிகழ்வுகளை நடத்துதல்.
2. ஈரலிப்பான நிலையை உள்ளே உருவாக்கும் செற்பாடுகள் இடம்பெறுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக நீர் உணவு அருந்துதல் காலணிகளுடன் பிரவேசித்தல்.

3. நூலகத்துடன் தொடர்பற்ற பொருட்களை களஞ்சியப்படுத்தல். உதாரணமாக பழைய வாளிகள் தும்புத்தடிகள் .
4. வகுப்பறைகளில் மேற்கொள்ளப்படும் முறைசார்ந்த பாடக்கற்பித்தல்களை நூலகத்திற்குள்ளே நடாத்துதல்.
5. ஆசிரியர் ஓய்வறைகளாக பயன்படுத்தல். இது பெரும்பாலான பாடசாலைகளின் நூலகங்களில் அவதானிக்கப்பட்ட குறைபாடாகும்.
6. நூலகத்தினுள் வேறுநூல்களும் கொப்பிகள், பைகளும் கொண்டு வருதல்.
7. முக்கிய விருந்தினர்கள் பொதுவாக அரசியல் பிரமுகர்கள், விருந்தினர்கள் வரும்போது அவர்களுக்கான உபசரிப்புக்களையும் மதியஉணவு வழங்கலையும் நூலகத்தில் ஒழுங்கு செய்தல்.
8. நூலகத்திற்கு வருகின்ற் மாணவர்களுக்கு அதிகளவான கட்டுப்பாடுகளை விதித்தல்.
9. நல்ல தரமான விலை உயர்வான நூல்களை அலுமாரியில் பூட்டிவைத்தல் இவ்வாறான செற்பாடுகள் பாடசாலை நூலகங்களில் இடம் பெறுவதை தவிர்த்துக் கொள்ளல்.

இவற்றை பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் ஊடாக நீக்கிகொள்ளலாம் இன்று நூலகங்களில் E - library பயன்பாடு காணப்படுகின்றது. இந்நூலகம் தொடர்பான சிந்தனை 1945 ஆண்டு Vannevar Bush என்பவர் தனது "As we may think" என்ற கட்டுரையில் விஞ்ஞானிகள் தகவல்களை பெற்று களஞ்சியப்படுத்தி மீண்டும் பயன்படுத்த உதவும் என்ற கருத்தை முன்வைத்தார். அவரின் சிந்தனையில் உதித்ததே E - library ஆகும். இது பாடசாலை மட்டத்திலே வளர்ச்சி அடைய வேண்டிய ஒன்றாகும் பாடசாலைகள் நூல்களை அல்லது சாதனங்களை இணையத்தில் பதிந்து இலத்திரனியல் வடிவில் சேமித்து பாவிக்க முடியும். இந் நூலகத்தினால் பல நன்மைகளை பெற முடியும் பௌதீக வரையறை கிடையாது பல்வகை அணுகு முறை காணப்படும். களஞ்சியப்படுத்தி வைப்பதில் செலவு குறைவு. எந்த நாட்டில் உள்ள நூலகங்களில் உள்ள நூல்களை சிறுதொகைப்பணம் செலுத்தியோ அல்லது உடன்பாட்டு முறையிலே பயன்படுத்த முடியும்.

இதனை பாடசாலை நூலகத்தில் பயன்படுத்தும் போது மேற்கூறப்பட்ட விடயங்களை பாடசாலை மனிதவளம் நன்மையாகப் பெற்றுக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

## முடிவுரை

நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு ஔவையார்

பாடசாலை பாடநூல்களைக் கொண்டு அறிவை விதைக்கும் களமாகும். ஆனால் நூலகமோ அந்த அறிவை வளர்த்து செழுமைப்படுத்தும் மற்றொரு களமாகும். பாடசாலையும் நூலகமும் இணைபிரியாதவையாகும். இலங்கையில் பாடசாலை நூலகங்களின் நோக்கங்களும் தொழிற்பாடுகளும் செவ்வனே நிறைவேற்றி செல்லும் போது மாணவர்களின் வாசிப்பு தொடக்கம் அனைத்து வகையான திறன்களும் மேம்படுத்தி செல்லப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூலகம் சிறப்பிடம் பெற

- விழிப்புணர்வுடன் எதிர்கொண்டு செயலாற்றும் நிர்வாகம்.
- வேகமும் உதவும் குணமும் உடைய நூலகர்.
- ஈடுபாடும் திறந்த மனம் கொண்ட ஆசிரியர் குழாம்.
- துடிதுடிப்பும் ஆர்வமும் கொண்ட மாணவர் சமூகமும் வேண்டும்.

எனவே மரபு வழி கற்பித்தல் முறைக்கு பதிலாக வளங்களை அடிப்படையாக கொண்டு மாணவர்கள் கற்க வேண்டும் என்ற சிந்தனையை கருத்தில் கொண்டு மாணவர்களை அறிஞர் ஆக்குவதற்கு வகுப்பிற்கு இணையானது நூலகம் ஆகும். அந் நூலகத்தை இளம்பருவத்திலையே முறையாக பயன்படுத்துபவரே அறிஞராவர்.

நம்மை ஏமாற்றாத ஒரு சிறந்த நண்பன் புத்தகம்"

<u>ஊசாத்துணை நூல்கள்</u>


1. அனந்தராஜ் ந. (2014). நூலக அபிவிருத்தி முகாமைத்துவம்
   வல்வெட்டித்துறை : நந்தி பதிப்பகம்

2. அனந்தராஜ் ந. (2006).பாடசாலை முகாமைத்துவம்.
   கொழும்பு : குமாரன் புத்தக இல்லம்.

3. கமால்தீன்: எஸ்.எம்.(2003).பாடசாலை நூலகம் ஓர் அறிமுகம்.
   கொழும்பு : குமரன் புத்தக இல்லம்

4. சந்திரசேகரன், சோ. (2007). கல்வியின் நவீன செயல் நெறிகள்.பக் 82-88
   கொழும்பு : குமரன் புத்தக இல்லம்

5. ஸ்ரீகாந்த லட்சுமி அ. (2011).தகவல் வள முகாமைத்துவம். பக் 29-31
   கொழும்பு : குமாரன் புத்தக இல்லம்.


**நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்.**

**- ஆபிரகாம் லிங்கன் -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் திறனை அதிகரிக்கும் வாசிப்பு

**திரு.பா.குமுதன்**
ஊடகவியலாளர்
பூந்தோட்டம்,
வவுனியா.

**"நான் இறந்த பிறகு என் உடல் மீது மலர்மாலைகளை வைக்காதீர்கள் என் மடி மீது புத்தகங்களை பரப்புங்கள்"**

இது இந்தியாவின் முதல் பிரதமர் "ஜகவர்லால் நேரு" தெரிவித்தகருத்து. வாசிப்பின் மீதும் புத்தகங்கள் மீதும் அவர் கொண்டிருந்த அலாதியான பிணைப்பை அது வெளிப்படுத்தி நிற்கின்றது. வாசிப்பு ஒருவரின் சிந்தனையையும், செயற்பாட்டையும் தூண்டிவிடுகின்றது. சிறந்த வாசிப்பு தனிமனிதனை மாத்திரமல்லாமல் அவன் சார்ந்த சமூகத்தையும் வளர்ச்சிப்பாதைக்கு இட்டுசெல்கின்றது. நல்ல புத்தகங்களை வாசிப்பவர் சிறந்த பேச்சாளராகவும், கருத்தாழம் நிறைந்த எழுத்தாளனாகவும், கற்பனைவளம் மிக்கவர்களாவும் பரிணமிக்கின்றனர். பரந்துபட்ட உலகிலே ஒவ்வொருநாளும் நாம் அறியப்படவேண்டிய பல சம்பவங்கள் தினமும் நிகழ்ந்த வண்ணமே இருக்கிறது. அவற்றை நாம் அறிவதற்கான ஒரே வழியாக வாசிப்பு அமைந்திருக்கிறது. தற்காலத்தில் இலத்திரனியல் சமூக ஊடகங்களின் வளர்ச்சியின் தாக்கம் புத்தகவாசிப்பின்மீதான ஆர்வத்தினை குறைத்து அக்கறையீனத்தை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் வாசிப்பின் மீதான நீட்சியை அடைவதற்கும், அதன் கனதியை உணர்த்துவதற்கும் துறைசார்ந்தோர் ஆற்றிவரும் பங்குகள் அளப்பரியதாகின்றது.

<u>வாசிப்பின் மீதான நாட்டமின்மை</u>

தற்காலத்தில் நவீனதொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி, வாழ்கைசுமைகளின் அதிகரித்த தன்மை என்பன வாசிப்பு பழக்கத்தின் மீதான நாட்டம் அருகிச்செல்வதற்கு காரணமாக அமைந்திருக்கின்றது. முன்னொரு காலத்தில் புத்தகங்கள் அல்லது பத்திரிகைகள் மாத்திரமே மனிதர்களிடத்தில் தகவல்களை பகிர்ந்துகொள்ளும் முதன்மை ஊடகமாகஇருந்துள்ளது. அவை உறுதிப்படுத்தபட்ட தகவல்களையும், உண்மைத்தகவல்களையும் மக்களிடத்தில் கொண்டு சேர்த்திருந்தது. அதற்கு மாறாக தற்காலத்தில் தொழில்நுட்ப புரட்சியின் பன்முகத்தன்மை "எண்ணியல்" (டிஜிட்டல்) வாழ்கைமுறையை நோக்கி எம்மை நகர்த்திவருகின்றமையை அவதானிக்கமுடியும். அவை இலத்திரனியல் வலைதளங்கள் மீதான அதீத பயன்பாட்டை நோக்கி மனித சமூகத்தை திசைதிருப்பியிருக்கிறது. அது வாசிப்பின் மீதான அக்கறையீனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அத்தோடு உலக மயமாக்கலால் இயந்திர மயமாக்கபட்ட வாழ்கைமுறை, மாறிவருகின்ற உலக ஒழுங்கிற்கமைய தம்மையும் மாற்றி முன்னோக்கிசெல்வதில் மனிதசமூகம் சந்திக்கின்ற அழுத்தங்கள் போன்றனவும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாசிப்புபழக்கம் குறைவடைவதற்கான அடிதளங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை ஒரு புறம் எனில் மறுபுறம்இலத்திரனியல் அல்லது சமூகதளங்கள் மூலம் பரப்பப் படுகின்ற திரிபுபடுத்தப்பட்ட, உறுதிப்படுத்தமுடியாத தகவல்கள் எதிர்மறையான சமூகத்தின் வளர்ச்சிக்கு உரமூட்டுவதாகவும் அமைந்துவிடுகின்றது.

<u>வாசிப்புடனான கல்வியின் அவசியம்</u>

ஆரோக்கியமான வாசிப்பு பல்துறைசார்ந்த கல்வியாளனை உருவாக்குகின்றது. வாழ்வில் வெற்றியடைய கல்வி எவ்வளவு முதன்மையானதோ அது போல கல்வியில் திகழ்வதற்கு வாசிப்பு முதன்மையானதாக விளங்குகின்றது. எனினும் இன்றைய மாணவர் சமுதாயம் அதனை உணரமறுக்கின்றது. பாடப்புத்தகங்களை வாசித்தால் மாத்திரம் அறிவினை பெற்றுக்கொள்ளமுடியும் என்பது மாணவர்களின் மனக்கணக்காக இருக்கிறது.

அதற்கு நிறுவனம் சார்ந்த கல்வி கட்டமைப்புகளும், கல்விமுறைகளும் செல்வாக்குச் செலுத்துவதையும் நாம் மறுக்கஇயலாது. பரீட்சையில் சித்தி எய்துவதற்கும், தொழில் ஒன்றை பெற்றுகொள்வதையும் நோக்காகக்கொண்டே இன்றைய கல்விமுறைகள் வரையறை செய்யபட்டிருக்கின்றது. இதனால் மாணவர்களின் சிந்தனைத்திறன் குறுகிய வட்டத்திற்குள் மட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால் பாடப்பரப்பிற்கு அப்பாற்பட்ட வாசிப்பின் தேடல்மூலமான கல்வியை பெற்றுகொள்வதில் மாணவர்சமூகம் பின்னடைவை சந்தித்துநிற்கின்றது. அது ஆய்வாழம் நிறைந்த பல்துறைப்புலமையாளர்களின், உருவாக்கத்தில் தாக்கத்தைஏற்படுத்துகின்றது. எனவே வாசிப்பே ஆழமான கல்வியையும், ஆளுமையுள்ள சமூகத்தையும், சிந்தனை திறன்கொண்ட மனிதரையும் உருவாக்கும் என்றமுக்கியத்துவத்தை மாணவர்கள்மத்தியில் உணர்த்தும் பணியினை கல்விதுறைசார்ந்தோர் முன்னெடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது. மறுபுறம் மாணவர்களும் நல்லவற்றை வாசித்து கருத்துச்செறிவினை உள்ளடக்கிய தலைமுறைகளாக உருமாறுவதற்கு பங்களிக்கவேண்டும்.

<u>நூலகங்களின் பங்கு</u>

நூலகங்கள் அறிவுப்பசிக்கும், தேடல்களிற்கும் வித்திடுகின்றன."ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றது" என்பது மூத்தோர் வாக்கு. இலத்திரனியல் புரட்சியின் அதீத வளர்சியான காலத்திலும் புத்தக வாசிப்பின் நீட்சியையும், பாரம்பரியத்தையும் பத்திரப்படுத்தி பேணிக்காப்பதில் நூலகங்கள் முன்னிலை வகிக்கின்றன. பன்னாட்டளவில் பிரசித்திபெற்ற அறிஞர்கள், புரட்சியாளர்கள், கல்வியாளர்களின் வாழ்கையை புரட்டிப்பார்த்தால் அவர்கள் நூலகத்தை எப்படிப் பயன்படுத்தியிருந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். எனினும் அழிந்து வருகின்ற வாசிப்புபாரம்பரியம், நூல்நிலையங்களின் பரந்துபட்ட உருவாகத்தின் அவசியத்தை தற்போது உணர்த்திநிற்கின்றது. குறிப்பாக நமதுநாட்டில் நகரை மையப்படுத்தியதாக நூல்நிலையங்கள் அமைந்திருக்கின்ற நிலையில், அவை கிராமங்களிற்கும் விஸ்தரிக்கபடவேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. அதன்மூலமே வாசிப்பின் மீதான அதீத வெற்றியினை நாம் அடைந்துகொள்ளமுடியும். இதன்மூலம் போதைப்பழக்கம், சிறுவர் துஸ்பிரயோகம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை, களவு போன்றவற்றில் ஈடுபட்டு தடம்மாறிச்செல்கின்ற இளைஞர் சமூகம் முன்னோக்கி செல்லக்கூடிய இயல்நிலையை உருவாக்கமுடியும். இன்று நவீன தொழில்நுட்ப வளர்சிக்கு சவால்விடுக்கும் வகையில் அனேகமான நூலகங்களில் கணினி மூலமான புத்தகவாசிப்பு முறைகள் உருவாக்கபட்டிருக்கின்றமை ஒரு மைல் கல்லாகவே பார்க்கமுடியும். எனினும் அதன் திருப்தியீனம் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் அதிருப்தி தெரிவித்துவருகின்ற நிலையில் அதனை மெருகூட்டும் செயற்பாடுகளை நூலகங்கள் மேற்கொள்ளவேண்டியஅவசியம் கருத்தில் கொள்ளப்படவேண்டும். இதேவேளை வாசிப்புமீதான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விதமாக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்ற தேசியவாசிப்பு மாத நிகழ்வுகளின் முன்னோட்டமான செயற்பாடுகள் பாராட்டபடக்கூடியதுடன், அது மென், மேலும் விரிபுபடுத்தப்படவேண்டிய முக்கியத்துவத்தினையும் துறைசார்ந்தோர்க்கு ஏற்படுத்தி நிற்கின்றது.

**போதும் என்று நொந்துபோய் புதுவாழ்வைத் தேடுகிறீர்களா?**
**ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கு.**

**- இங்கர்சால் -**

**சில புத்தகங்களை சுவைப்போம் - சிலவற்றை அப்படியே விழுங்குவோம் - சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்!**

**- பிரான்சிஸ் பேக்கன் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்

**செல்வி.மு.பிரியதர்சினி**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
மாவட்டச் செயலகம்
வவுனியா.

**"ஒரு புத்தகம் மீண்டும் மீண்டும் திறந்து பார்க்கக் கூடிய ஒரு பரிசாகும்"**
- ஹரிசன் கெய்லர்

மாறி வருகின்ற உலகில் ஒவ்வொரு மனிதர்களும் தமது அன்றாட வாழ்வில் பல அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஏனெனில் இன்று மனிதர்கள் எதிர்நோக்கும் சவால்கள் ஏராளம். இச்சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு பலர் பல பொழுதுபோக்கு விடயங்களில் ஈடுபட்டாலும் ஒருசிலரே அறிவை வளர்க்க கூடிய புத்தகங்களை தமது பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாக தேர்ந்தெடுக்கின்றனர்.

"இன்று வாசிப்போர் நாளை தலைவர்களாகின்றனர்" என்ற மார்கிரேட் புல்லரின் கருத்திற்கமைவாக வாசிப்பானது புதிய விடயங்களை கற்றுக்கொள்வதற்கும், கற்பனைத்திறனை விரிவுபடுத்தல் போன்ற பல அறிவு கூர்மைக்கு முக்கியம் பெற்று விளங்குகின்றது. இலங்கையில் 2004ம் ஆண்டில் கலாசார விவகாரங்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சு ஒக்டோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாக அறிவித்தது. இதன் நோக்கம் மக்களால் வெளியிடப்பட்ட புத்தகங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல் மற்றும் புத்தகங்களை வாசிப்பதற்கு மக்களை ஊக்குவித்தல் என்பதாகும். அந்த வகையில் வாசிப்பானது சிறியோர்கள் மட்டுமல்லாது வளர்ந்தோர் வாழ்வில் எவ்வளவு முக்கியம் பெறுகின்றது என்பதனை அறிந்திருத்தல் அவசியமாகின்றது.

வாசிப்பு பழக்கமானது பலருக்கு சலிப்பைத் தருகின்ற விடயமாக இருந்தாலும் இது மன ஆரோக்கியத்திற்கும், சிந்தனை செய்வதற்கும் உதவுகின்றது. சொற்களிலும், கதையிலும் கவனம் செலுத்துவதன் மூலம் இது மூளை மற்றும் அறிவாற்றல் செயற்பாடுகளைத் தூண்டுகின்றது. குறிப்பாக விமர்சன பகுப்பாய்விற்கு காரணமான மூளையின் பகுதி தூண்டப்படுவதனால் இந்த தூண்டுதலானது எம் மனதை கூர்மைப்படுத்துவதற்கு உதவுகின்றது. கத்தியை கூர்மைப்படுத்துவதை போலவே வாசிப்பானது மூளையின் இந்த பகுதியைக் கூர்மைப்படுத்துகின்றது. வாசிப்பானது எமது கவனத்தை மேம்படுத்துவதற்கு உதவுகின்றது. சொற்களில் தீவிரமாக கவனம் செலுத்துவதன்மூலம் மூளை கணிசமான அளவு தகவல்களைப் பெறுகின்றது. இது உங்கள் விமர்சன சிந்தனை மற்றும் பகுப்பாய்வு திறன்களையும் மேம்படுத்தும். இந்த தூண்டல் மனதிற்கு ஆரோக்கியமானதுடன் சிந்தனை செயல்முறைகளையும் கூர்மைப்படுத்துகின்றது. ஒரு புத்தகம் இதனை எவ்வாறு செய்கிறது என்பது எமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். உலகின் மிக வெற்றிகரமான சிலர் ஒவ்வொரு நாளும் வாசிக்கிறார்கள். அறிவு முக்கியமானது என்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். எனவே உங்கள் கனவை நனவாக்க விரும்பின் இவ்வாறானவர்களின் வழிகாட்டல்களை நீங்களும் பின்றபற்ற வேண்டிய நேரம் இதுவாக இருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கும் போது சொல்லகராதி மற்றும் அறிவு விரிவாக்கம் அடைகின்றது. நாம் வாசிக்கும் போது புரிந்துகொள்ள கடினமான சில சொற்களை காணலாம். சொல்லகராதியானது அடையாளம் காண குழப்பமான புதிய வார்த்தைகளை புரிந்துகொள்வதற்குப் பயனளிக்கும். ஒவ்வொரு நாளும் புதிய புதிய புத்தகங்களை, நாவல்களை, கதைகளை மற்றும் செய்தித்தாள்களை வாசிக்க பழகுவதனால் சொல்லகராதியை இலகுவாக பயன்படுத்த முடியும். இதனால் நாளடைவில் புதிய பல சொற்களை அறிய முடியும். இந்த சொல்லகராதி எவ்வாறு பயனளிக்கின்றது என்றால், பல நாட்கள் வாசித்தும் புரியாத புதிய சொற்களைப் பார்த்த பிறகு எமது சொற்களஞ்சியம் ஒரு நேரத்தில் ஒரு வார்த்தையை விரிவாக்கத் தொடங்கும். சொற்களையும் சொற்தொடர்களையும் ஒவ்வொரு நாளும் வாசிக்கும்போது மூளையானது ஒரு புதிய சொற்களஞ்சியத்தால் நிரம்பும். "ஒரேகான்" பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட ஆய்வில் இது நிரூபிக்கப்பட்டது.

வாசிப்பு என்பது ஒரு சிறந்த பொழுதுபோக்கு வடிவம் என்பதை பெரும்பாலான மக்கள் தமது அனுபவத்திலிருந்து அறிவார்கள். வாசிப்பானது மன அழுத்தத்தைக் குறைக்க உதவும். வாசிக்கின்ற போது சொற்களில் கவனம் செலுத்தும் நிலையானது பதட்டத்தையும், அழுத்தங்களையும் போக்குவதற்கு உதவுகின்றது. பல மக்கள் தமது வாழ்விலுள்ள மன அழுத்த நிலமைகளை சமாளிப்பதற்காகவும் ஓய்வை ஏற்படுத்தவும் வாசிக்கும் பழக்கத்தை கொண்டுள்ளனர். சிலர் தமது அன்றாட வாழ்வில் ஏற்படும் துன்பத்திலிருந்து தப்பிப்பதற்கும் வாசிக்கின்றார்கள். இது ஒரு சில நிமிடங்கள் ஓய்வெடுக்கவும் தமது பிரச்சினையை மறக்கவும் அனுமதிக்கின்றது. அந்த சில நிமிடங்கள் மனவலிமையை நிரப்புவதோடு புதுப்பிக்கப்பட்ட மனநிலையுடன் வாழ்க்கையை எதிர்கொள்ள ஒரு வாசகருக்கு உதவுகின்றது.

எழுத்தாளர்களுக்கே வாசிப்பின் முக்கியத்துவம் தெரியும். ஒரு வேலைக்காகவோ அல்லது பொழுதுபோக்கிற்காகவோ விடயங்களை எழுதினாலும் அதிகமான வாசிப்பு பழக்கமானது எழுதும் திறனை மேம்படுத்தும். அத்துடன் பல்வேறு வழிகளில் எழுதுகின்ற திறனை வலுப்படுத்த உதவும். நாம் எம்மை அறியாமலேயே இத்திறனை வளர்த்துக்கொள்கிறோம். ரொபேர்ட் லோஜிஸ் ஸ்டீபன் என்பவர் தினமும் தனது பொக்கட்டில் இரு புத்தகம் வைத்திருப்பதாகவும் அதில் ஒன்று வாசிப்பதற்கும் மற்றையது எழுதுவதற்கும் என்று கூறுகின்றார். அந்தவகையில் வாசிப்பானது கற்பனை வளத்தை கணிசமான அளவு அதிகரிக்கின்றது. ஒரு நாவலை வாசிக்கின்றபோது அதிலுள்ள உலகத்தையும், கதாப்பாத்திரங்களையும் கவனிக்கின்றோம். இதன்காரணமாக கற்பனையை வைத்திருக்கின்ற மூளையின் ஒருபகுதி தூண்டப்படுகின்றது. இந்நிலமையானது அந்நாவலிலுள்ள இடங்கள் எப்படி இருக்கும் மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதனை கற்பனை ரீதியாக சித்தரிப்பதற்கு எம்மை பழக்கப்படுத்துகின்றது.

வாசிப்பானது நித்திரைக்கு உதவுகின்றது. அதாவது நித்திரை செய்ய உதவும் என்பது அர்த்தமல்ல. ஆனால் இது ஒட்டுமொத்த தூக்க முறையையும், அமைதியையும் மேம்படுத்த பங்களிப்பு செய்கின்றது. வாசிப்பானது நிதானமாகச் சிந்திக்கப் பழக்குவதுடன் அழுத்தமற்ற இலகுநிலைக்கு கொண்டுசெல்வதனால் ஆழ்ந்த மற்றும் அமைதியான தூக்கத்தை வரச்செய்கின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மிருதுவான வெள்ளைப்பக்கங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தை வாசிக்கும்பொழுது அது ஒரு சிறந்த பொழுதுபோக்கையும் அமைதியை அனுபவிக்கவும் உதவும். சிறந்த பொழுதுபோக்கு என்பது அடுத்த சிறந்த புத்தகத்தை எடுப்பதற்கு வாசகர்களை ஈர்க்கின்றது. வாசிப்பு பழக்கமானது தினசரி அடிப்படையில் எம் வாழ்வில் மகிழ்ச்சியைத் தரும். மேலும் உள மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும். அத்தோடு ஒவ்வொரு நாளையும் பிரகாசமாக்கும். சில நேரங்கள் மன அழுத்தமாகவும் கவலையாகவும் இருக்கும். அப்போது இரவில் படுத்துக்கொண்டு ஒரு நல்ல புத்தகத்தை வாசிக்கும்போது மன அழுத்தம் குறைந்து உளம் விரிவுபடுகின்றது.

மேலும் முற்றிலும் மாறுபட்ட கண்ணோட்டத்தில் விசயங்களைக்காண புத்தகங்கள் உதவுகின்றன. ஒரு குறிப்பிட்ட கலாசாரத்தைப்பற்றி வாசிக்கும்போது எமது கலாசாரத்திலிருந்து அது எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனைப் புரிந்துகொள்ளலாம். அந்தக்கலாசாரத்தைப் பற்றிய புதிய விசயங்களை அறிந்துகொள்வீர்கள். அத்துடன் புத்தகங்கள் புதிய யோசனையைத் தருகின்றன. வாசிப்பதனால் நாம் தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்கின்றோம். உலகை சீரான கண்ணோட்டத்தில் பார்க்கவும் ஒழுக்க சீலங்களை வளர்த்துக்கொள்ளவும் இது உதவும்.

இதனைவிட வாசிப்பானது எமது ஞாபக சக்தியை மேம்படுத்தவும், பாடசாலை பரீட்சை பெறுபேறுகளை மேம்படுத்தவும் பகுப்பாய்வு ரீதியாக விமர்சிக்கும் திறனை மேம்படுத்தவும், தன்னம்பிக்கையினை கட்டியெழுப்பவும், சமூகத்திற்கு உதவி செய்யவும், மனதை ஒருமுகப்படுத்தி விடயங்களை உன்னிப்பாக செவிமடுப்பதற்கும், உணர்ச்சிகளைக் கையாள்வதற்கும், மனவெழுச்சிகளை விருத்தி செய்யவும், அறிவினை விருத்தி செய்யவும் வாசிப்பு உதவுகின்றது.

வாசிப்பு என்பது மனதிற்கு ஒரு பயிற்சியாக அமைவதோடு இது அவர்களை அறிவூட்டுவதற்கான புதிய அறிவின் கதவுகளைத் திறக்கின்றது. வாசிக்கும் சிறார்கள் சிறந்த அறிவாற்றல் கொண்டவர்களாக வளர்கின்றார்கள். வாசிப்பது சிறாருக்கு மட்டுமன்றி அனைவருக்கும் சிறந்தது.

எனவே தொகுத்து நோக்கும்போது புத்தகங்களானவை உடல் நலத்திற்கும் பொழுதுபோக்கிற்கும் நன்மைபயக்கின்ற அற்புதமான விடயங்களை கொண்டவை. அவைகள் கிட்டத்தட்ட ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கான கருவிகள் போன்றவை. படிக்காதவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள முடியாது. ஆனால் தினமும் வாசிப்போர் ஒரு நல்ல புதத்கத்தின் முக்கியத்துவத்தை அறிந்தவர்கள். படிக்கதேர்ந்தெடுக்கும் புத்தகம் உங்கள் விருப்பத்திற்கேற்ப காதல் கதையிலிருந்து புனைக்கதை வரை அமையலாம். ஆனால் படிக்க தெரிவுசெய்தது எதுவாக இருப்பினும் வாசிப்பானது மனதிற்கும் உடலிற்கும் பல நன்மைகளை தரவல்லது.

**"ஒரு நல்ல புத்தகம் ஒருவரது வாழ்வில் சிறந்ததொரு சம்பவமாக மாறுகிறது"**

- ஸ்டென்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்புப் பழக்கத்தின் முக்கியத்துவம்

**திருமதி.தர்ஷா திருக்குமரன்**
உதவி அதிபர்
வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

இன்றைய நவீன உலகிலே அறிவானது பரந்து காணப்படுகின்றது. ஆதி காலத்தில் கல்வெட்டிலும் பின்பு பாட்டிலும், ஏட்டிலும், நூலிலும் இருந்த அறிவானது இன்று நவீன தொழில்நுட்பத்தினூடாக பெறக்கூடியதாக உள்ளது. இன்று வாழ்வின் ஆதாரம் கல்வி என்று கூறப்படுகின்றது. ஒருவிடயத்தைக் கற்றல், சிந்தித்தல், தெளிதல் என்பதனூடாக அறிவைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இந்நிலையை அடைய உதவுவது அறிவை அடிப்படையாகக் கொண்ட நூல்களாகும்.

வாசிப்பு சகலருக்கும் இயல்பானது. ஆனால் வாசிப்பு எல்லோருக்கும் சாத்தியமாவதில்லை. சிலர் சிறுவயதிலிருந்தே வாசிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பர். இப்பழக்கம் தொடருமானால் தேடலும், சுயகற்றலும், சுய சிந்தனையும், படைப்புத்திறனும் கொண்டவர்களாகவும் வளர்ந்து வருவர். வாசிப்புப்பழக்கமுடையவர் நேர்மனப்பாங்குடையவராகவும் இருப்பர்.

வாசிப்புப்பழக்கம் பெற்றோரிடமிருந்தும் ஆசிரியரிடமிருந்தும், பிள்ளைகளுக்கு ஏற்படுத்தப்படுதல் வேண்டும். ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடத்துக்கும், பாடநூலுக்கும் அப்பால் சென்று மாணவரின் அறிவுத்தேடலை விருத்தி செய்ய உதவுகின்றனர். மாணவர்கள் சுயகற்றலில் ஈடுபடச் செய்வதன் மூலம் அனுபவத்தைப் பெற்று தன்னிடமுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றலுள்ளவர்களாகவும், சிறந்த ஆளுமைத் திறனுடையவர்களாகவும், மற்றவர்களை மதிக்கக்கூடியவர்களாகவும், சிறந்த மனிதப் பண்புள்ளவராகவும் பிறருக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ முடிகின்றது.

சிறந்த நூல்களை வாசிக்கும் ஒருவரினுடைய அறிவும், எழுத்தாற்றலும் விரிவடைகிது. சிறந்த வாசிப்பின் மூலம் கட்டுரை, கடிதங்களின் இலக்கண வடிவங்களையும் எழுத்து மொழியினையும் சரியாக அறிந்துகொள்ள முடிகின்றது. பேச்சு மொழி பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டாலும் சரியான எழுத்து மொழிப் பிரயோகத்திற்கு வாசிப்பு அவசியமாகின்றது.

இன்று வாசிப்பானது ஒரு சிகிச்சையாக உலகமெங்கும் மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு நூலின் உள்ளடக்கத்திற்கும் அந்நூலை வாசிப்பவரிற்கும் இடையே ஒரு வலுவான உறவை ஏற்படுத்தி அதை வெளிப்பாட்டு சிகிச்சை முறைகளில் ஒன்றாகக்கையாளும் போது அது வாசிப்புச் சிகிச்சை எனப்படுகின்றது. தனிப்பட்ட பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பதற்காக மிகக் கவனமாக தெரிவு செய்யப்பட்ட நூல் ஒன்றை வாசிக்கச் செய்தல், உளநலச் சிகிச்சையாக அமைகின்றது. உளநல ஆரோக்கியத்தை உயர்த்துவதிலும், வாசிப்பு உதவிபுரிகின்றது. இதனை ஆய்வுகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் நூல்களை வாசிப்பதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம். மீத்திறனுடைய பிள்ளைகளுக்குச் சில பிரச்சினைகள் இருக்கும். பொருத்தமான நண்பர்களை தெரிவு செய்தல், மற்றவர்களை விட வித்தியாசமான முறையில் கற்றல், நுண்ணறிவை விருத்திசெய்யும் வழிகள் போன்றவற்றை அறிய நூல்கள் உதவுகின்றன. அதுமட்டுமன்றி பெற்றோரிடையே ஏற்படும் பிணக்குகள், பிரிவு, குடும்பத்தில் மற்றுமொரு குழந்தையின் புதுவரவு போன்ற சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்கு வாசிப்பு பழக்கம் ஒரு சிகிச்சையாக அமையும்.

வாசிப்பு மாதத்தில் மட்டுமல்ல எப்போதும் சிறந்த நூல்களை வாசிக்க வேண்டும். சுயமான வாசிப்பு பழக்கம் ஏற்படும் போது எமது சமூகததின் வாசிப்புப் பழக்கம் புத்தெழுச்சி பெறுவதுடன் எமது கல்விப்பாரம்பரியமும் கட்டியெழுப்பப்படும். இதற்காக சகலரும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

**ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள் அவனே எனது வழிகாட்டி!**

**- ஜுலியஸ் சீசர் -**

**உலக வரைபடத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்கெல்லாம் போக விரும்புகிறாயா ஒரு நூலகத்துக்குச் செல்.**

- டெஸ்கார்டஸ் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ප්‍රියමනාප පාසල් පුස්තකාලය හා අප

**වී.කිරුජා**
13 ශ්‍රේණිය
වවුනියා ගාමිණි මහා විද්‍යාලය
1 ස්ථානය

අපගේ ජීවිතයේ තිබිය යුතු අත්‍යවශ්‍ය සාධකයක් තමයි පුස්තකාලය. පුස්තකාලය දැනුම පිරි ස්ථානයකි.

පුස්තකාලය මගින් දැනුම ලබා ගෙන පුද්ගලයෙකු පරිපූර්ණ දැනුමෙන් යුත් කෙනෙකු වෙන්නට පුළුවන්."කියවීම මිනිසා සම්පූර්ණ කරයි" එයින් කියැවෙන අර්ථය වන්නේ කියවීම තුළින් මිනිසෙකු සම්පූර්ණ දැනුමකින් යුත් පුද්ගලයෙකු වන බවයි.

පුස්තකාලය පරිහරණය නොකර කිසිඳු දැනුමක් නොමැතිව ජීවත් වන පුද්ගලයා කිසිදු අරමුණක්, කිසිදු බාහිර දැනුමක් නොමැතිව ළිඳේ සිටින මැඩියා සේ තමන්ගේ ජීවිතය නිකරුනේ ගෙවයි. මෙයින් සිදුවන්නේ තමා තමාටම, තම පවුලටම මෙන්ම සමාජයට ද බරක් වීම පමණකි. එවැනි පුද්ගලයෙකු සමාජයට අවශ්‍ය වන්නේ නැත. නුවණින් සපිරි පරිපූර්ණ පුද්ගලයෙකු රට ජාතියට අවශ්‍ය වේ.

පුද්ගලයන් පොත පත පරිහරණය කරන ආකාරය ක්‍රම දෙකකට සිදු වේ. පළමුවැන්න පුස්තකාලය භාවිතයෙන් පොත පත කියවීමය. දෙවැන්න ලෙස සඳහන් කළ හැක්කේ තම අතැති මුදලින් පොත පත මිළ දී ගෙන කියවීමයි. තම අතැති මුදලින් පොත පත මි ළ දී ගැනීම දැනට සිදු වන්නේ ඉතා අල්ප වශයෙන් බව සමහරු ප්‍රකාශ කරති.

පෙරදිග රටවල් අතරින් සාපලයතා අනුපාතය අතරින් ශ්‍රී ලංකාව වන අප රට ඉහළ අනුපාතිකයක් ගනු ලබයි. නමුත් එම දැනුම පැවතිය ද පොත පත කියවා දැනුම ලබා ගන්නා පිරිස අද වන විට අඩු වෙමින් පවතින බවක් පෙනනුම් කරයි. එයට හේතුව කාර්යබහුලත්වය යි. තව ද පුස්තකාල කරා ගොස් පොත පත කියවීමට පෙළඹෙන්නේ අල්ප වශයෙනි. අනාගත පරපුර භාර ගැනීමට සිටින ළමුන් ලෙස අපි පුස්තකාලයට ආදරය කරමු; ඵල ලබමු.

අපගේ පුරාණ ආදි මුතුන් මිත්තන් පොත් පත්වලට දැක්වූයේ අපමණ සෙනෙහසකි. ඔවුහු තමන්ගේ ජීවිතයේ නොයෙකුත් අවස්ථාවල පොත් පත් ලියා තැබූහ. නොයෙක් පොත් පත් කියවා තිබුණහ. මිනිස් සංහතියේ ආරම්භය දක්වාම දිගු ඉතිහාසයක් පුස්තකාල පොත් පත්වල ඇතුළත්ව තිබේ. ලෝකයේ අද වන විට කෝටි ගණන්, මිලියන් ගණන් පොත්පත් තබේ. නමුත් ඒවා කියවා අත්දැකීම් ලබා ගැනීමට පෙළඹෙන්නේ ඉතා අල්ප වශයෙන් බව පෙනේ.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

කියවීම මිනිසෙකුට ඉතා අපහසු කාර්යයක් බවට වර්තමානය වන විට පත්ව ඇත. නමුත් අපහසුවෙන් හෝ පොත පත කියවීමට කැමැත්ත දක්වනනේ නම් අගය කළ හැකිය. පොත පතට, පුස්තකාලයට අප ආදරය කරන්නට පටන් ගන්නේ නම් එදින සිට පුස්තකාලය අපට ප්‍රියමනාප ස්ථානයක් බවට පත් වන්නට පටන් ගනියි. පොත පතට බොහෝ සෙයින් ප්‍රිය කරන්නට පටන් ගනියි. අපගේ ප්‍රියතම විනෝදාංශය බවට කියවීම පත්වේ. මෙය නිසැක වශයෙන් ප්‍රකාශ කිරීමට හැකි වන දිනය විශේෂ දිනයක් වනු ඇත.

වීසි එක් වන සියවසේ පුරවැසියන් බවට පත් වෙමින් සිටින අපට පාසලෙන් ලබා ගන්නා දැනුම පමණක් ප්‍රමාණවත් වන්නේ නැත. බාහිර ලෝකය පිළිබඳ, නවීන තාක්ෂණය පිළිබඳව ද එමෙන්ම අපගේ අතීතයේ තාක්ෂණික දැනුම ආදිය ලබා ගැනීමට ද අපට අමතර දැනුම අවශ්‍ය වන්නේ ය. මෙම අමතර දැනුම අප ලබා ගැනීමට නම් පුස්තකාල භාවිතය අත්‍යවශ්‍ය වන්නේ ය. අප විවේකීව සිටින අවස්ථාවේදී පුස්තකාලයට ගොස් පොත පත පරිශීලනය කිරීම කළ යුතුය. මෙමඟින් අපට විශාල දැනුමක් ලබා ගැනීමට හැකියාව උදා වන්නේ ය.

අපගේ පාසල් පුස්තකාලයේ නොකෙුත් විෂය සමගාමී පොත් පත් රැසක් තිබේ. අපට අපගේ විෂය පිළිබඳව නොයෙකුත් ආකාරයේ ගැටළු ඇත්නම් පාසල් පුස්තකාලය භාවිත කර එම ගැටළු විසඳා ගැනීමට හැකියාව ලැබේ. විෂය සමගාමී පමණක් නොව විවිධ මාදිලියේ පොත් පත් ,සඟරා පුවත්පත් ආදිය පුස්තකාලය තුළ දී අපට ලබා ගැනීමට හැකිය. පුවත්පත් පරිහරණය තුළින් එදිනෙදා ලෝකයේ සිදුවන නවීනතම තොරතුරු දැනගැනීමට හැකියාව ලැබෙන්නේ ය. කියවීම තුළින් පුද්ගලයාගේ දැනුම කොතරම් වර්ධනය වන්නේ ද යන්න හොඳින් පුස්තකාලය පරිහරණය කරන්නා නවතම සොයා ගැනීම් කිරීමට ද පෙළඹෙන්නේ ය.

අපගේ ආදි මුතුන් මිත්තෝ එදා පැවති තාක්ෂණය පුස්කොළ පොත්වල ලියා තැබූහ. ඒවා කියවා පරිහරණය කර තිබේ. එනම් වර්තමානයේ මෙතරම් තාක්ෂණයක් පවතින යුගයක ඇයි අපට පුස්තකාලය ප්‍රියමනාප ස්ථානයක් බවට පත් කර ගත නොහැකි වන්නේ යන ප්‍රශ්නය මතු වෙයි. එය අපට හැකියි. අපි සියලු දෙනාම එකමුතු වී පුස්තකාලය ප්‍රියමනාප ස්ථානයක් බවට පත් කර ගනිමු .පුස්තකාලයට ආදරය කරමු. පුස්තකාලය ද ප්‍රියමනාප ස්ථානයක් බවට පත් කර අපිත් ප්‍රියමනාප පුද්ගලයන් වෙමු.

අප අපගේ උපන් දිනයට කොතරම් මුදලක් වැය කරනවා ද යන්න දනිමු.ඒ වෙනුවට පොත පත කියවා දැනුම ලබා ගෙන අප විසින්ම පොතක් ලියා පුස්තකාලයට පරිත්‍යාග කිරීමට අපට හැකියි. එවැනි ක්‍රියාවක් කරන්නේ නම් එය අපගේ අනාගත පරපුරට ද උදාහරණයක් වනු ඇත. එම හේතූන් නිසා පුද්ගලයන්ගේ පළමු අත්තිවාරම වන පාසල එයින් ලබා ගන්නා දැනුම ද පාසල් පුස්තකාලය ද අපගේ ප්‍රියමනාප ස්ථානයක් වනවාට කිසිදු සැකයක් නොවෙනු ඇත.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A View on the book I most liked

Essay 1st Place Under 13

Miss.V.Thuwaraga
Grade - 13
V/Rambaikulam M.V

During my last summer vacation. I had a lot of time to read books. I usually read novels. Most of the novels represent a romantic episode, but few novels criticize social and cultural problems on that view my most favorite novel "The vendor of sweets" is noteworthy.

It is written by the great Indian writer Sir R.K.Narayan. This novel can be taken as a mirror of the society because the writer peeped into the deeper sense of the reader to represent the current situation in te society. It can be considered as a criticism between past and present, indigenous culture Vs western culture, generation gap between father and son, nature Vs modernity father Vs son and so on.

In this novel Jagan a sweet seller is the protagonist his son mali his wife Ambika his cousin and his daughter - in-alw. Grace are just taken to enright Jagan's character Jagan is a person who follows indigenous culture of India, he usually reads Bagawatheetha He is the follower of Mahathma Gandhi but his son mali is a controvicial character thus this crafts a war between father and son. mali thinks this religion faiths and culture are out dated things so he refuses to follow these things and it may he the seed planted for the conflict. This is the current situation in each and every house, Sir R.K.Narayan has achieved his best to show these incident.

In most of the plot the writer uses the technique flash back it is also in third person point of view. Although Jagan be lives lot in tradition and customs he had an innocent love on his son Maci. This shows how each father in our society sacrifies his life in order to bring his children foward.

In the characterization writer writer addes a character cousin, This is the most intresting character in the whole story. He is not a relative or he is not a neighbor but he is very close to Jagans family. He plays a perfect role as a mediator between father and son. In our society too we can see a character like this third person may interfere in our family problems and seek their advantage.

Main character Jagan shows the local colours in the plot he may he considered as a representative of Indian culture and his son Mali can be considered as a representative of western culture. Not only in India our country is also affected by western cture due to globalization, we have forgot our tradition culture and everything and we have stepped in to the magic of western culture. This novel act as a bow which releases an arrow towards us to


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

show that we are going to die by burrying our traditions and culture with us.

Ambika Jagan's wife plays a small innocent role in the novel she represent that no one can survive in this world without adapting to modern culture because when she was suffering from fever Jagan refuses her to take aspring he gave her some margosa leaves instead of asprin. but after some days she got a brain tumour and she died. Here writer shows the importance of adaptation. According to durwin's theory 'Suvival of the fittest' we should to fit inorder to suvive in this modern world.

The reasons for why this book became my most favorite is Sir.R.K.Narayan was brave enough to talk about social problems this novel can be taken as a mirror of our society, this shows father and son should have a strong relationship to achieve their target here in this novel the basement for the love wall between father and son is not strong enough to withstand the pressure exerted by the modernity, and at last not least the cover page admired me a lot, because it doesn't have edited images which attract readers, it just had a simple photograph of a boy who was standing in a shop.

This novel 'The vendor of sweets' will stand on my mind until my last breath because it is arranged in such way. This made me think a lot and this novel has induced me to follow our culture. After reading this novel I had a great respect on my father. This is the one and only book that made me turned to change my personality. This novel is selected for teaching school children in the subject English literature because all educated people belive this may change children mind and lead them on the correct path.

Thank you.

Once you learn to read, you will be forever free.

- Frederick Douglass -

There are many little ways to enlarge your world.
Love of books is the best of all.

- Jacqueline Kennedy -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 நூலக நிகழ்வுகள்

## நூலகத்திற்கு கணினி அன்பளிப்பு செய்தபோது





## இந்திய துணைத்தூதுவர் நூல்கள் அன்பளிப்புச் செய்தபோது



## நூலகத்தில் இடம் பெற்ற போட்டி நிகழ்வுகள் சில...














## நூலகத்தில் இடம் பெற்ற சிறுவர் தின நிகழ்வுகள் சில...







## இலத்திரனியல் நூலக திறப்பு விழா வைபவத்தின் பதிவுகள் சில...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் வாசித்து இரசித்த நாவல்

கட்டுரை 1ம் இடம்

**செல்வி.த.மதுர்ஜா**
தரம்-13
வ/சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி

நான் வாசித்து இரசித்த நாவலாக நான் வ.அ.இராசரத்தினம் அவர்களால் படைக்கப்பட்ட "ஒரு வெண்மணற்கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது" என்பதை குறிப்பிடுகின்றேன். "கொழுகொம்பு" எனப்படுகின்ற நாவலில் தனது நாவல் பயணத்தை ஆரம்பித்து வெண்மணற்கிராமம் எனும் நாவலையும் எழுதியவரே வ.அ.இராசரத்தினம் ஆவார். இவர் எழுதிய இந்நாவல் பற்றிநோக்கும்பொழுது ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்த தாமோதரம் என்பவனது வாழ்வையும் அவன் தான் ஒரு விஞ்ஞானப்பட்டதாரியாகவோ ஒரு வைத்தியராகவோ வரவேண்டும் என்ற எண்ணம் மாறி அவன் ஒரு விஞ்ஞான பாட ஆசிரியராக வந்தமையையும் அவனது வாழ்வில் அவன் மாமன்மகளுடன் ஏற்பட்ட காதல் மற்றும் அவர்கள் இருவரின் காத்திருப்பு என்பவற்றை கதைக்கருவாக கொண்டு ஆசிரியர் இந்நாவலை எழுதியுள்ளார்.

இந் நாவலின் கதைக்களமாக ஆலங்கேணாக்கிராமமும் நெல்லியடியும், தம்பலகாமமும் காணப்படுகின்றது. தொடர்ந்து இந்நாவலைப்பற்றி நாம் நோக்கும் பொழுது கிராமத்து மண்வாசனையுடன் இந்நாவலானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதாவது கிராமத்து மக்களின் வாழ்க்கை, பண்பாட்டு அம்சங்கள், ஒழுக்க விழுமியங்கள், உணவு முறைகள் மற்றும் கல்விமுறைகள் என்பனவற்றை கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நாவலின் கதைக்கருவானது சமூகப்பிரச்சினைகளை தளமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அதாவது சிறுவயதுத்திருமணம், பெண் கல்வி அடக்குமுறை, பாடசாலைகளில் கல்வியை பெற்றுக்கொள்வதில் ஏற்படுகின்ற சிரமம் என்பன கதை ஆசிரியரினால் மிகவும் தெளிவுற எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இவை மாத்திரமன்றி தற்காலத்தில் எரிகின்ற விடயங்கள் பற்றி பேசப்பட்டுள்ளது. அதாவது கல்வி, இளவயதுத் திருமணம், காதல், வேலை, தொழில்வாய்ப்பு என்பன பற்றி பேசப்பட்டுள்ளமை மிகவும் சிறப்பான ஒரு விடயம் ஆகும். அத்துடன் ஆசிரியரது மொழிநடையானது எளிமையான மொழிநடையாகக் காணப்படுகின்றது. கதையாசிரியர் தனது கருத்தை தெரிவிக்கும்போது "எழுத்துத்தமிழில்" தனது கருத்தையும் மற்றைய சந்தர்ப்பங்களில் பேச்சுத்தமிழிலும் கதையை மிகவும் சிறப்பாக நகர்த்திச் செல்கின்றார். இதுமாத்திரமன்றி வாசிப்பவர் மனதைத்தூண்டும் வகையில் தனது கதையை நகர்த்திச் செல்கின்றமை மிகவும் தந்திரமான விடயம் அகும். அதாவது இறுதியில் சௌந்தரமும், தாமோதரமும் சேர்வாகளா அல்லது பிரிவார்களா அல்லது என்ன நடக்கும் என்று வாசிப்பவர் மனதை தூண்டும் வகையில் தனது கதையை நகர்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவை மாத்திமன்றி பெண்கல்வியின் முக்கியத்துவம் மிகவும் அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது "வீட்டு மறைப்புக்காக கட்டியிருக்கிற கிடுகுவேலிக்குள்ளால உலகத்த பாக்கிற பெண் சமூகம் எப்பதான் சுதந்திரமா இந்த


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகத்த பார்க்கப்போகுதோ" என்ற தாமோதரத்தின் கூற்றினூடாக பெண் சுதந்திரம் பற்றி தெளிவாகக் கூறியுள்ளார். இத்துடன் கிராமிய பண்பாடுகளும் செம்மையாக இவரால் உரைக்கப்பட்டுள்ளது. மிகவும் உணர்ச்சி பூர்வமாக இவர்தனது கிராமிய பண்பாடுகள் பற்றி கூறியுள்ளார். அத்துடன் நாவலாசிரியர் இந்நாவலில் தாமோதரம் ஏ.எல்.பரீட்சை எழுதும் சந்தர்ப்பத்தில் அவனது தந்தையான மயில்வாகனம் இறந்ததால் அவனால் தனது பரீட்சையை ஒழுங்காக எழுதமுடியாமல் போனது. இதனால் அவனது இலக்கை அடைய முடியாமல் போனது என்றவாறு கதையை நகர்த்துகிறார். ஆனால் இவ்வாறு நடக்காமல் அவன் தந்தை இறக்காமல் இருந்திருந்தால் அவனால் தனது இலக்கை அடைந்திருக்க முடியும் என்று கதையை நகர்த்தியிருந்தால் இன்னமும் நன்றாகக் கதை அமைந்திருக்கும்.

இந்நாவலில் உவமை அணிகள், அடுக்குத்தொடர்கள், இணைமொழிகள் என்பவற்றையும் ஆங்கிலச் சொற்கள் என்பவற்றையும் கையாண்டு நாவலை சிறப்பாக அலங்கரித்துள்ளார். இது மாத்திரமன்றி ஒரு கிராமம் எவ்வாறு ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதை ஆலங்கேணாக்கிராமத்தை உதாரணமாகக் காட்டியுள்ளார். அத்துடன் அரசியலையும் இடைநடுவே இக்கதையில் புகுத்தியுள்ளார். அதாவது தமது சமூகத்தவர் (ஒரு தமிழன்) ஒரு எம்.பி ஆக உள்ளதாகவும் கதையில் குறிப்பிட்டுள்ளார். இது மாத்திரமன்றி இக் கிராமம் ஒரு ஆசிரியருக்காக இருபது வருடம் காத்திருக்க வேண்டும் என்றும் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளார்.

தனது நண்பனான பாலா, மற்றும் அவனது மச்சாள் பற்றியும் குறிப்பிட்டு கல்வியின் முக்கியத்துவத்தை சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். இறுதியில் சௌந்தரமும் எஸ்.எஸ்.ஸி. பரீட்சையில் சித்தி பெற்று ஒரு ஆசிரியையாக வளர்ந்து தாமோதரத்திற்காக காத்திருக்கிறார் என்றவாறு கதையை நிறைவு செய்கிறார். ஆனால் கதை அவ்வாறு நிறைவுசெய்யாமல் தாமோதரமும் சௌந்தரமும் இறுதியில் சேர்வதாக இருந்திருக்கலாம் என்பது இந்நாவலில் ஒரு நாவலை வாசித்த ஒருவராக எனது மனதில் தோன்றும் ஒரு எதிர்பார்ப்பாக உள்ளது.

**ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தைத் தொடங்கி வைக்கிறான்.**
**வாசகன் அதனை முடித்து வைக்கிறான்.**

**கனவு காணுங்கள். ஆனால் கனவு என்பது**
